பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 11 செவ்வாய்க்கிழமை (25-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:51

# செம்மணி விவகாரம் இழுபடுவது குறித்து நீதிமன்றம் விசனம்!

## அனுமதிக்க முடியாது என்கிறார் நீதிவான்

யாழ்ப்பாணம், ஜனவரி25

**செம்மணியில் உள்ள மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகி ஒன்றரை வருடங்களாகிவிட்டன. இனியும் இதனை இழுபட விட முடியாது.**

**- இவ்வாறு நீதிமன்றத்தில் கடும் விசனத்துடன் கருத்து வெளியிட்டார், இந்த விடயத்தை விசாரணை செய்து வரும் யாழ். மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன்.**

"இந்த விசாரணையை மேலும் நீடிக்க வேண்டும் என்று யாராவது விரும்பினால் அதற்குப் பாத்திரவாளியாக இருக்க நான் விரும்பவில்லை.

"எனது விசாரணையைப் பூர்த்தி செய்து இந்த அமர்வை முடித்துவிடுவேன். அச்சமயம் இதற்கான காரணங்களையும் பகிரங்கப்படுத்துவேன். அதன் பிரதிபலிப்பைச் சம்பந்தப்பட்டவர்கள் சந்திக்கட்டும்"

- இப்படி அதிருப்தியையும், வேத

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசமைப்பு: பொ.ஐ.மு.கூடி ஆராய்ந்தது

புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை விரைவுபடுத்தவென நியமிக்கப்பட்டிருந்த விசேட குழு நேற்று மாலை ஜனாதிபதி தலைமையில் கூடியது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இடம்பெறும் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் உத்தேச புதிய அரசமைப்பு குறித்து இணக்கம் காணப்பட்டதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி குழுவின் கூட்டம் அடுத்த வாரம் மீண்டும் நடைபெறும் என்றும் -

புதிய தேர்தல் முறை தொடர்பான அம்சங்களை நகல் சட்ட மூலத்தில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக அப்போது ஆராயப்படும் என்றும் -தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# குற்றம் சுமத்தப்படும் அதிகாரிகளை கைது செய்ய ஆதாரங்கள் இல்லை!

## அரச சட்டத்தரணி கைவிரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

"செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக பாடசாலை மாணவி கிருஷாந்தி பாலியல் வல்லுறவுப் படுகொலை வழக்கின் குற்றவாளிகளான ஐந்து முன்னாள் படையினரும் தமது வாக்குமூலத்தில் பிரஸ்தாபித்திருந்த 13 படை அதிகாரிகளைக் கைது செய்வதற்குப் போதிய சாட்சியங்கள், ஆதாரங்கள் கிடைக்கவில்லை."

- சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டத்தரணி வஸந்த கோத்தாகொட இவ்வாறு நேற்று யாழ்.நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

செம்மணி விவகாரம் தொடர்பான விசாரணை நேற்று யாழ்.மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் அவர் தமது தரப்பு வாதங்களை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய சூழ்நிலை காரணமாக எலும்புக்கூடுகள் மற்றும் தடயப் பொருள்களை மக்கள் பார்வைக்கு வைக்க முடியாதுள்ளது. அதனை ஆறு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு வேண்டுகிறேன்.

என்றாலும் செம்மணி தொடர்பான ஏனைய விசாரணைகளை குடாநாட்டுக்கு வெளியே நடத்திவருகிறோம். முழுமையாக விசாரணைகள் நிறுத்தப்படவில்லை.

கிருஷாந்தி பாலியல் வல்லுறவுப் படுகொலை வழக்கின் குற்றவாளிகள் ஐவரும் பிரஸ்தாபித்த 13 படையினர் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெறுகின்றன. அவர்களைக் கைதுசெய்வதற்குப் போதிய சாட்சியங்கள் கிடைக்கவில்லை.

கிருஷாந்தி பாலியல் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளைப் பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்தியதற்காக - அந்தக் கோபத்தில் - அந்தக் குற்றவாளிகள் தன் மீது இப்போது பொய்க்குற்றம் சுமத்துவதாக இந்த 13 படையினரில் ஓர் அதிகாரி கூறுகின்றார்.

பிரஸ்தாப 13 படையினரையும் கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகள் ஐவரையும் புலனாய்வுப் பொலீஸாரும், இராணுவப் பொலீஸாரும் தீவிரமாக விசாரித்து வாக்கு மூலம் பெற்றுள்ளனர். ஆனால் விசாரணையில் முன்னேற்றம் காணப்படவில்லை.

செம்மணிப் புதைகுழிப் படு

(12ஆம்பக்கம் பார்க்க)

# எலும்புகள் மற்றும் தடயங்கள் அடுத்த மாதம் பார்வைக்கு!

## நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜன.25

செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் தடயப்பொருள்களை அடுத்தமாதம் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை யாழ். பொலீஸ் நிலையத்தில் அடையாளம்காண்பதற்காக வைக்க வேண்டும் என்று யாழ்.மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் நேற்று உத்தரவிட்டார்.

அந்த விசாரணையின் போது சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல தலைமையிலான நிபுணர் குழு பிரசன்னமாக இருக்க ஏற்பாடு செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன், இந்த விவகாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் பிரகாரம், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரையாவது முதலில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

இந்த விசாரணைகளை முன்னெடுக்கத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு இராணுவ மற்றும் பொலீஸ் தலைமைகளிடம் கோரவேண்டும் என்றும் -

அடுத்த மாதம் 21ஆம் திகதி முதல் யாழ். பொலீஸ் நிலையத்தில் நடைபெறும் விசாரணைகளில் காணாமற்போனோரின் உறவினர்கள் பாதுகாவலர்கள் கலந்து கொள்ளும் வகையில் செய்திகளைப் பகிரங்கப்படுத்த வசதியாகக் குடாநாட்டில் உள்ள பத்திரிகைகள் உட்பட ஏனைய செய்தி ஊடகங்களின் ஒத்துழைப்பை நாடவேண்டும் என்றும் -

நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-5-9)

## பலாலித் தளத்தில் வங்கிக் காகிதாதிகள் வானத்தில் பறந்தன!

யாழ்ப்பாணம்,ஜன.25

இலங்கை வங்கி யாழ்.கிளைகளுக்கு என கொழும்பில் இருந்து விமானம் மூலம் எடுத்து வரப்பட்ட பெருமதியான காகிதாதிகள் நேற்று பலாலி விமான நிலையத்தில் இறக்கப்பட்ட சமயம் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன.

பணநோட்டுக்கள் மற்றும் சில்லறைக் காசுகள் 'டிரங்க்' பெட்டிகளிலும், காகிதாதிகள் நீம்களில் பொதிகளாகவும் எடுத்துவரப்பட்டு, விமானம் பலாலியில் தரித்ததும் விமானத்திலிருந்து இறக்கப்பட்டு விமானத்துக்கு அருகே ஓடுபாதையில் வைக்கப்பட்டிருந்தன. பயணிகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் புறப்படுவதற்காக விமானம் அசையத் தொடங்கியதும் அதிலிருந்து வேகத்துடன் அழுத்தமாக வீசப்பட்ட காற்றில் பொதிகள் பிரிந்து காகிதாதிகள் விசிறப்பட்டு விமான நிலைப் பிரதேசம் எங்கும் காற்றாடிகள் விட்டது போல வானத்தில் பறக்கத்தொடங்கின.

கணனி பிரிண்டர்களுக்குப் பயன்படுத்துவதற்கு என - நான்கு பொதிகளில் - எடுத்துவரப்பட்ட காகிதாதிகளில் ஒரு பொதி மட்டுமே எஞ்சியது.

முன்னரும் ஒரு தடவை வங்கிகளுக்கு எடுத்து வரப்பட்ட காசோலைப் புத்தகங்கள் உட்பட பல ஆவணங்கள் இப்படி அடித்துச் செல்லப்பட்டுத் தொலைந்ததாக தெரியவந்தது. (ஐ-உ)

## ஷெல் வீச்சினால் அரியாலையில் காயமடைந்த குடும்பஸ்தர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.25

அரியாலை மற்றும் கொய்யாத் தோட்டம் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் சிக்கிக் காயமடைந்த குடும்பஸ்தர் நேற்று அதிகாலை யாழ்.ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான - கந்தையா குணசேகரம் (வயது45) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஆனந்தன்வடலி வீதியில் இவரது வீட்டுக்கு அருகே ஷெல் வீழ்ந்து வெடித்தது. வீடு சேதமடைந்ததுடன் அங்கு நின்ற உழவு இயந்திரமும் பலத்த சேதமடைந்தது. (ஐ-5-86-17-139)

### மக்கள் இடம்பெயர்வு

அரியாலை,ஜன.25

நேற்றுமுன்தினம் இரவு அரியாலைப் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததை அடுத்து அப்பகுதியில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

ஷெல்கள் வீழ்ந்து வெடித்த துபாற்கட்டைச் சந்திப் பகுதியில் நேற்று சந்தை கூடவில்லை. கடைக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு நேரம் காவலுக்காக வயல் வாடிகளில் தங்கியிருந்த ஐவர் மன்னாரில் சுட்டுக்கொலை!

மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் காவலுக்காக வயல் வாடிகளில் தங்கியிருந்த ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களின் சடலங்கள் நேற்று மாலை மன்னார் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

வயல்களில் வேலைக்குச்சென்ற இவர்கள் முதல்நாள் இரவு வாடிகளில் தங்கியதாகக் கூறப்படுகிறது. வயல்களில் குறிப்பிட்ட தூரங்களுக்கு ஒன்றாக அமைந்துள்ள இந்த வாடிகளில் தனித், தனியே ஒருவரே தங்கி இருப்பது வழக்கம் என்றும் -

ஆனால் இவர்கள் ஐவரின் சடலங்களும் சூட்டுக்காயங்களுடன் ஒரே இடத்தில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் இடம்பெற்ற குஞ்சுக்குளம் பகுதியில் பொலீஸ் காவல் நிலையம் ஒன்று உள்ளது. அப்பகுதியில் பொலீஸார் இரவு ரோந்தில் ஈடுபடுவது வழமை என்றும் கூறப்படுகின்றது. கொல்லப்பட்ட ஐவரில் நால்வர் குஞ்சுக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் நறுவிலிக்குளத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் சடலங்கள் அடையாளம் காண்பதற்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் - மன்னார் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ-7)

## மொறக்கொட்டாஞ்சேனையில் காயமடைந்த சிறுமியும் மரணம்

மட்டக்களப்பு,ஜன.25

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் புலிகள் குழுவினர் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த பாடசாலை மாணவியான செல்வி செல்லத்தம்பி புஷ்பலதா (வயது10) நேற்று உயிரிழந்தார்.

இவரது சகோதரரான செல்லத்தம்பி விஜயன் (வயது14) சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே உயிரிழந்தமை தெரிந்ததே.

இதேவேளை, -

மேற்படி சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடத்தும் படியும் -

சம்பந்தப்பட்டோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியும் -

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் தொல்லை தவிர்ப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியையும் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ஐ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## TRRO
## Computer Training Centre
## INSTRUCTOR/LECTURER

We are looking for a graduate / graduand with computer science to be employed as a lecturer / instructor [Part time / Full time] The applicant should have abilities to organise and take initiative. Attrative pay. Closing date for applications 31 - 01 - 2000.

Secretary,
T R R C,
106, 4th Cross Street,
Jaffna.

[C 10786]



## DCS இன்
## மாபெரும்
## புலமைப் பரிசில் பரீட்சை

**சகல கணனி கற்கை நெறிகளையும்**
இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் கற்றுக் கொள்ள

**புலமைப் பரிசில் பரீட்சைக்கான**
விண்ணப்பங்களை கீழ் வரும் எமது கிளை நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **30-01-2000**
விண்ணப்பக் கட்டணம்: **100/-**

குறிப்பு: A/L 2000 பரீட்சை எடுக்கும் மாணவர்கள் குறித்த புலமைப் பரிசில் திட்டத்தில் விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் தங்கள் கற்கை நெறிகளை குறித்த A/L 2000 பரீட்சை முடிவடைந்த பின்னர் தொடர ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

Director,
DCS

124/1, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(73049)

N. M. V. வீதி,
நெல்லியடி,
வடமராட்சி.


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
பரராஜலிங்கம் ராஜேஸ்வரனின் சகோதரர்

### பரராஜசிங்கம் இந்திரஜீ

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நண்பர்கள்.**

257, பலாலி வீதி.
சுந்தர்மடம்.
(73039).

## கண்ணீர் அஞ்சலி

### சண்முகராசா இந்திரகுருபரன்

(உரிமையாளர், வெஸ்கோ கிறீம்ஹவுஸ், திருநெல்வேலி)

அவர்கள் 23 - 01 - 2000 அன்று கொழும்பில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு நல்லூர் வணிகர் கழக நிர்வாக சபை உறுப்பினர்களும் நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்ட சகல வர்த்தகர்களும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

நல்லூர் வணிகர் கழகம்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(73041)

## கண்ணீர் அஞ்சலி

### அருட்திரு. E. J. அருமைநாயகம் B.A

(செயலர், யாழ். ஆயர்)

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தின் முன்னாள் பங்குத்தந்தை அருட்திரு. E.J. அருமைநாயகத்தின் மறைவையொட்டி எமது பங்கின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கின்றோம்.

**யாழ். அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தையும் பங்கு மக்களும்.**

(73022)

கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்மஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாள்கள் விசேட அபிஷேகம் பூசையுடன் நடைபெறும்.

எதிர்வரும் பெப்பிரவரி மாதம் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு சங்காபிஷேகமும் விசேட பூசை, வழிபாடுகளும் இடம்பெறும்.

திருவிழா நாள்களில் தினமும் நாடு நலம் பெறவும் மக்கள் மன நிம்மதியுடன் வாழவும் நாட்டில் அமைதி சமாதானம் வேண்டி சமூக ஜோதி கா. கணேசதாசன் தலைமையில் இளைஞர்களால் பஜனை-கூட்டு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (சு-30)

★ ★ ★

யாழ். பஸ் நிலையம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும், விசேட பூசையும் பின் சுவாமி வீதி வலம் வருதலும் இடம்பெறும்.
(சு-30)


## பாலாஜீ
## கிறீம் ஹவுஸ்
## தேவை

- சப்பிளையர்
- காசாளர்

பெண்கள், அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
நேரில் விண்ணப்பிக்கவும்

உரிமையாளர்,
இல. 61,
மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(73033)



**லிபேட்டி** அச்சுவேலி

விஜயகாந்த் (இருவேடம்)
மீனா, பிரபுதேவா
நடித்த

## வானத்தை போல

(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
070-212678
[சி/10778)



## நாகம்ஸ்
கன்னாகம்

சரத்குமார்
தேவயாணியின்

## சூரியவம்சம்

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72969]



## ராஜா
யாழ்ப்பாணம்

அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த

## அவள் வருவாளா

10.30, 2.30
[சி/10743]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி அரியபுத்திரன் பார்வதி

திருமதி அரியபுத்திரன் பார்வதி 21- 1- 2000 இல் கொழும்பில் காலமாகி விட்டார். அன்னார் சுந்தரம் நாராயணசாமியின் உடன் பிறப்பான அரியபுத்திரனின் அன்பு மனைவியும், கதிர்வேல், கருணாநிதி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், தகனக்கிரியைகள் என்பன 23 - 01 - 2000 முற்பகல் கொழும்பில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
**நாராயணசாமி**
(அத்தான்)

இல. 301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(73025)

## பரராசசிங்கம் இந்திரசிறி

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 257, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரராசசிங்கம் இந்திரசிறி 23-01-2000 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

இவர் பரராசசிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் தலைமகனும், கணேசலிங்கம் (விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), புஷ்பமலர், காலஞ்சென்ற திலகவதி மற்றும் சோமசேகரம், யோகரூபி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அருமை அண்ணனும், காலஞ்சென்ற திருமதி வசந்தி கணேசலிங்கத்தின் மைத்துனரும், காராளசிங்கம், காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் மருமகனும், திருமதி மகேஸ்வரி பத்மநாதனின் பெறாமகனும், திருமதி காமாட்சியின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25—01—2000) காலை 9-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து இறுதியாத்திரையாக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்களாக.

தகவல்:-
**சோ. பரராசசிங்கம்**
(தந்தை)

257, பலாலி வீதி,
கந்தர்மடம்.
(73043)

## ச. சின்னப்புநாயகம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு, சந்தனமாதா வீதி, இல. 36, ச. சின்னப்புநாயகம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அகுந்தா இலட்சுமியின் அன்புக் கணவரும் திருமதி ஞானப்பூ இராமநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை), வித்துவான் அடைக்கலமுத்து (அமுது—லண்டன்), காலஞ்சென்ற செபரத்தினம் (நுண்ணாய்வு பரிசோதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்பராணி (இந்தியா), மரியசேகரம்பிள்ளை (ஆஸ்திரேலியா), இராசேஸ்வரி, கமலராணி (மிருசுவில்), சவுந்தரநாயகம் (ஆசிரியர், சென். சாள்ஸ் ம. வி), செல்வநாயகம் (கனடா), விமலராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சு. முருகேசு (இந்தியா), இ. ஜெயசிங்கம் (சட்டத்தரணி), செ. நீக்கிலாப்பிள்ளை (ஓவசியர்), சோதி (ஆஸ்திரேலியா), அஞ்சலீனா சவுந்தரநாயகம் (உப-அதிபர் சென். ஜேம்ஸ் மகளிர் வித்.), றஜிதா (கனடா), ஆ. ஜெயநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யூலியன் சாந்தினி (இந்தியா), சாந்தகுமார் (பிரான்ஸ்), கிறிஸ்ரி ஜெயந்தினி (கனடா), காலஞ்சென்ற சோபனா, துஷ்யந்தா (விஞ்ஞான பீடம் யாழ்.); அஞ்சனா (நுண்கலைப்பீடம், யாழ்.), கீர்த்தனா, சத்தியன் (சார்ஜா) யூலியா (ஆஸ்திரேலியா)' நிக்சன் அமலராஜன் (மருத்துவபீடம், யாழ்.), நிலானி (முன்பள்ளி ஆசிரியை), நியூட்டன், நிசங்கன், டொமினிக், லக்ஷி, சுதா (கனடா) அன்ரலி (கனடா), ஜேம்ஸ் (லண்டன்), ஜெனி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் இந்தியாவில் வசிக்கும் ஜொய், யஸ்ரி, கனடாவில் உள்ள சிரோயி, டெஸ்மன், ஜெருமி, செருபிம், டினோஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப. 3.30 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
**இரா. ஜெயசிங்கம்** (சட்டத்தரணி)
(மருமகன்)

பாண்டியன்தாழ்வு.
யாழ்ப்பாணம்.
(73048)

## OBITUARY

SABAPATHYPILLAI Samuel Selvarajah Sabapathypillai formerly of Bank of ceylon, passed away in Canada on 20 th January 2000. Funeral took place on the 22nd. Friends and relativesp laase accept this intimation.

A. R. Sabapathypillai
( Brother )

' Primrose Cot ',
Chavakachcheri.
(C/10788)

# காகிதாதிகள், அச்சிட்ட படிவங்கள் எடுத்து வரவும் அனுமதி அவசியம்!

யாழ்ப்பாணம், ஜன. 25
குடாநாட்டுக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் அச்சிட்ட படிவங்களை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என்ற புதிய நடைமுறை அமுல் செய்யப்படுவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

செயலகத்துக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் அச்சிடப்பட்ட படிவங்கள் இதுவரை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்றி கப்பல் மூலம் எடுத்துவரக்கூடிய சூழ்நிலை நிலவியதால் கட்டுப்பாடின்றித் தாராளமாக அவற்றை இங்கு எடுத்துவர முடிந்தது என்றும் —

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றே இனி அவற்றை எடுத்துச் செல்லலாம் என்ற புதிய நடைமுறையால் அவற்றை எடுத்து வருவதில் காலதாமதம் ஏற்படுகின்றது என்றும்—மேலும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டு விவசாயிகளுக்குத் தேவையான யூரியா உரம் எடுத்துவரப்படுவதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என்றும் —

ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா எடுத்துவர விண்ணப்பிக்கப்பட்ட போது அரைவாசியை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் — செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-3)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 23 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சாவகச்சேரி**

(118670 ஏ), (118670 பி), (126245 ஏ), (126506 ஏ), (126506 பி), (127944 ஏ), (127944 பி), (127971 ஏ), (127971 பி), (127972 ஏ), (129804 ஏ), (129804 பி), (129804 சி), (129856 ஏ), (129912 ஏ), (126064 ஏ), (126064 பி), (126064 சி), (126067 ஏ), (126067 பி) (130522 ஏ), (134873 ஏ)' (134873 பி), (134875 ஏ), (134875 பி), (134878 ஏ), (134878 பி), (134878 சி) (134885ஏ), (134885பி), (134885சி), (134885டி), (134896ஏ), (134908ஏ), (134908பி), (134908சி), (134908டி), (134908ஈ), (134908எவ்), (134923ஏ), (134923பி), (134923சி),

**யாழ்ப்பாணம்**

(114262ஏ), (122491ஏ) (122491பி), (126491சி), (126956ஏ), (128377ஏ), (128377பி), (128579ஏ), (128603ஏ), (128603பி), (128676ஏ), (128732ஏ), (128732பி), (128779ஏ), (128779பி), (128779 சி), (128786 ஏ), (128791 ஏ), (128791 பி), (128791 சி), (128791 டி), (128799 ஏ), (130003 ஏ), (130004 ஏ), (130004 பி), (130021 ஏ), (130045 ஏ), (130045 பி), (130045 சி), (130045 டி), (130045 ஈ), (130045 எவ்), (130050 ஏ), [130068 ஏ), (130094 ஏ), (130115 ஏ), (130174 ஏ), (130208 ஏ], (130208 பி), (130208 சி], (130218 ஏ], (130218 பி), (130218 சி], (130241 ஏ), (130241 பி], (130241 சி)' (130283ஏ), (130300ஏ), (130331ஏ), (133277ஏ), (133277பி) (133817ஏ),

**கரவெட்டி**

(119008ஏ), (119008பி), (120113ஏ), (127621ஏ), (127621பி), (127711ஏ), (127711பி), (127711சி), (127711டி), (127711ஈ), (127721ஏ), (127721பி), (127737ஏ), (127737பி), (127762ஏ), (127762பி), (127762சி), (127762டி), (127776ஏ), (127776பி), (127788ஏ), (127812ஏ), (127812பி), (127812சி), (129389ஏ), (129517ஏ), (129765ஏ), (129765பி), (132571ஏ), (132765ஏ), (132765பி), (132934ஏ), (132969ஏ),

**கோப்பாய்**

(128798ஏ)

**மருதங்கேணி**

(085018ஏ), (085018பி),

**நல்லூர்**

(128652ஏ), (128833ஏ), (128833பி), (128633சி), (128833டி), (130122ஏ), (130122பி),

**பளை**

(125508ஏ), (125508பி)

**பருத்தித்துறை**

(120204ஏ), (125929ஏ), (127577ஏ), (127577பி), (127577சி), (127578ஏ), (127727ஏ), (127729ஏ), (127810ஏ), (127847ஏ), (127847பி), (129453ஏ), (129713ஏ), (130880ஏ) (130881ஏ), (132549ஏ), (132549பி), (132822ஏ) (132852பி), (132961)

(ச)

## கவசம் மீட்பு

கொழும்பு, ஜன. 25
ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டிலிருந்து குண்டு துளைக்காத கவசம் ஒன்றை பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது. (இ-7)

## தென்னைகள் தறிப்பு

தென்மராட்சி, ஜன. 25
பளைப் பிரதேசத்தில் உள்ள சோரன்பற்று, புலோப்பளை ஆகிய பகுதிகளில் உள்ள தென்னம் தோட்டங்களில் கடந்த வாரம் மட்டும் ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரம் அரியும் இயந்திரம் மூலம் தென்னை மரங்கள் துண்டாக்கப்பட்டு உடனுக்குடன் வாகனங்களில் ஏற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-117]

# விழாக்களை விட செயல்களால்தான் மக்களுக்கு சேவை செய்ய முடியும்

## செயலகத் திறப்பு விழாவில் அரச அதிபர் உரை

வலி.கிழக்கு, ஜன. 25
''விழாக்கள் எடுப்பதை விட செயல்கள் மூலம்தான் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும்.''

இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன்.

புதிதாக நிறுவப்பட்ட வலி.கிழக்கு பிரதேச செயலகத்தின் திறப்பு விழா கடந்த புதனன்று நடைபெற்றது. பிரதேச செயலகத்தைத் திறந்து வைத்து அரச அதிபர் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

மக்கள் பல்வேறு துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவிக்கும் இன்றைய சூழ்நிலையில் விழாக்களை விடவும் எமது செயற்பாடுகளே முக்கியமானவையாகும். மக்களின் தேவைகளை இனங்கண்டு எம்மால் இயன்றளவு அவற்றைத் தீர்த்து வைக்க முயல வேண்டும்.

விவசாய வளம் மிகுந்த இந்தப் பிரதேசத்து மக்கள் இந்தச் செயலகக் கட்டடத்தை அமைப்பதற்குப் பல வழிகளிலும் உதவி உள்ளனர்; ஒத்தாசை புரிந்து உள்ளனர். அவர்களுக்கு இந்த வேளையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு ஒரு நிர்வாக அமைப்பு மூலம் விவசாய. விளைவு உற்பத்திச் சங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்— என்று அரச அதிபர் தெரிவித்தார்.

மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தனது உரையில் தெரிவித்ததாவது:—

வலி.கிழக்குப் பிரதேசத்து மக்களுக்கு இன்றைய நாள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நாளாகும். பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய — விவசாய வளத்தோடு சகல வளங்களையும் உள்ளடக்கிய — இந்தப் பிரதேசத்தில் இந்தக் கட்டடமும் மிளிர்ந்து நிற்பது இப் பகுதி மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும் — என்றார்.

புதிய பிரதேச செயலகம் அமைந்துள்ள காணிக் குழுவின் தலைவர் கலாபூஷணம் எஸ். சின்னமணி உரையாற்றியபோது —

வலி. கிழக்கு பிரதேசம் வடபகுதி, தென்பகுதி எனப் பரந்த — மக்கள் எண்ணிக்கை கூடிய — பிரதேசமாகும். வடபகுதியான சிறுப்பிட்டி, அச்சுவேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளுக்காக நீண்டதூரம் பயணம் செய்தே இந்தப் பிரதேச செயலகத்துக்கு வரவேண்டி உள்ளது. எனவே அந்த மக்களின் தன்மை கருதி வாரத்தில் ஒரு நாள் அல்லது இருநாள்கள் நடமாடும் பிரதேச செயலக சேவையை அந்தப் பகுதிகளிலும் நடத்த வேண்டும் எனக் கோருகிறேன் — என்றார்.

பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பலர் உரையாற்றினர். பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். வல்லிபுரம் நன்றியுரை வழங்கினார்.

(ஐ-180)

## பழுதான பொருள்கள் அழிப்பு

தென்மராட்சி, ஜன. 25
சாவகச்சேரி பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில், கைதடி, நுணாவில், சரசாலை, வெம்பிராய், சந்துவில் ஆகிய பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் சோதனைகள் மேற்கொண்ட போது பழுதடைந்த மற்றும் திகதி காலாவதியான பெருமளவு உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மனித பாவனைக்குதவாத நிலையில் காணப்பட்ட பழுதடைந்த மற்றும் திகதி காலாவதியான பிஸ்கட் வகைகள், பால்மா வகைகள், பால்ரின்கள், கோல்மன்ஸ் மைக்கற்றுகள், இனிப்பு வகைகள், போன்ற உணவுப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன என்று சரசாலை பொது சுகாதார பரிசோதகர் கா. சிவனேசகுமார் தெரிவித்தார்.

(இ-117)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். ஆயரின் செயலாளர்
அருட்திரு
**ஈ. ஜே. அருமைநாயகம்**

அடிகளார் 23-01-2000 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு மிகுந்த துயரத்தில் மூழ்கியுள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் பங்கு மக்கள்
புனித செபமாலை மாதா ஆலயம்.
உடுவில். (73017)

## யஜ்ஞோபவீத தாரண பிரம்மோபதேச (உபநயன) அழைப்பு

சிரஞ்ஜீவி கோ. ரகுவரன்

நாள்: 26-01-2000 புதன்கிழமை
முகூர்த்தம்:
காலை 9.36 முதல் 10.43 மணி வரை
இடம்:
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி அருகில்

முகூர்த்த நேரத்தில் அனைவரும் வருகை தந்து
செல்வன் ரகுவரனை
ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
சா. கோபால சர்மா
கந்தரோடை. (சி/10755) கோ. பவானி

## UNDP/UNOPS - JAFFNA
## Resettlement & Rehabilitation Programme
**Mine Action Pilot Project - Jaffna**

# VACANCY

### ASSISTANT EOD STAFF

Job Description

Duties will include NON TECHNICAL aspects only

- Responding to Ordinance related reports.
- Site visits and assessment of unexploded Ordinance ( UXO ) Problem.
- Assist International Explosive Ordinance Disposal ( EOD ) Specialist on field trips.
- Assist with Evacuation of danger areas during demolition.
- Carry out construction of Protective works before demolition.
- Report writing for Database.

Eligibility Requirements

Must have

- Very good working Knowledge of English ( Written & Spoken ).
- Minimum of G. C. E. ( O/L ) Educational Qualification.
- Own transport & Driving License for the same.

Period of Contract: One year

Only those who have above requirements should apply with your CV and your contact telephone number ( if any ) to reach the Office before 1630 Hrs on January 27th, Thursday.

MINE ACTION COORDINATOR
UNDP / JRRP
125, Temple Road, Jaffna.
(73016)

## ஈழத்துச்சிதம்பர ஆலய வீதியை திருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 25
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்து வருகிறது.

இதனால் ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள் சிரமம் அடைவதுடன் வாகனங்களும் பழுதடைகின்றன.

மார்ச் மாதம் ஆலயத்தின் மஹோற்சவம் நடப்பதற்கு முன் இந்த வீதியைத் திருத்துமாறு ஈ.பி.டி.பி. அமைப்பின் வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பொறியியலாளர் க. துரைராசாவிடம் கோரியுள்ளார். விரைவில் இந்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## கண்ணீர் அஞ்சலி

சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர்
**திரு. சு. சண்முககுலகுமாரன்**
அவர்களது பாசமிகு மாமனார்

### சிவக்கொழுந்து சுந்தரலிங்கம்

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

**சங்குவேலி அ.த.க. பாடசாலை,**
மானிப்பாய். (73008)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 06 — 09 — 1922

உதிர்வு: 26 — 12 — 1999

### திருமதி மகேஸ்வரி நாகமுத்து

26-12-99 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் இன்று 25-01-2000 எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்

கச்சாய் வீதி,
சாவகச்சேரி (72896)

## புனரமைக்கக் கோரிக்கை

அச்சுவேலியில் உள்ள தென்னை நாற்று மேடை உற்பத்தி நிலையத்தை புனரமைத்து தருமாறு யாழ். மாவட்ட தென்னை உற்பத்தியாளர்கள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. கே. ஜெகனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடாநாட்டில் இடம்பெற்ற போர் நிலைமையை அடுத்து சுமார் 85 ஆயிரம் தென்னை மரங்கள் அழிந்துள்ளன.

தென்னையை புனர் நடுகை செய்ய நல்லினத் தென்னம் நாற்றுக்களை தென்பகுதியிலிருந்தே பெறவேண்டியுள்ளது. இந்நாற்று மேடை புனரமைக்கப்பட்டால் குடாநாட்டில் மீள் புனர் நடுகைக்கான தென்னை நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## 168 பேர் தொடர்ந்து தடுத்து வைப்பு

கொழும்பு, ஜன. 25
கொலன்னாவை, கம்பஹா பகுதிகளில் கடந்த சனியன்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கைது செய்யப்பட்டவர்களில் 168 பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோரிடம் பொலீஸ் பதிவுச் சான்றிதழோ தேசிய அடையாள அட்டையோ காணப்படவில்லை எனவும்—

இதனாலேயே அவர்கள் மீதான விசாரணைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-7-164]

## பத்திரிகைகள் மீது விசாரணை

கொழும்பு, ஜன. 25
கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் திடீரென பிறப்பிக்கப்படும் ஊரடங்கு குறித்துத் தகவல்கள் முன்கூட்டியே வெளியே கசிவது தொடர்பாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் மீது நேற்று முன்தினம் முதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறையினர் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே மேற்படி விடயம் குறித்து தமிழ்ப்பத்திரிகை ஒன்றின்மீதும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

(இ-7-164)

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்: 1929 — 01 — 24

ஆண்டவன் அடியில்: 1997 — 01 — 25

மதுரகான நாதசுரமணி

### அமரர் காத்தார் சின்னத்துரை

மண்ணகத்தே வாழ்வாங்கு வாழவைத்த எம் அன்புத்தெய்வமே! ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு எக்காலமும் நீங்காதையா தங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு என்றும் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

**மனைவி, பெறாமகன்**
**ரவிச்சந்திரன் குடும்பத்தினர்**
(ஜெர்மனி)

பிருந்தாவனம்,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (சி/10757)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



நெஞ்சம் மகிழ
27—11—1972

நெஞ்சம் சீர்குலைய
26—12—1999

### திருமதி மதனரூபி தேவானந்தன்

பன்னிரண்டு தவமிருந்து பெற்றெடுத்த
பூங்கொடியே! நீ மழலை மொழி பேசி
எம்மை எல்லாம் அதிசயிக்க வைத்த அந்த
குழந்தைப் பருவத்தை மறப்போமா?
வானத்து நிலவா! வைகறைப் பொழுதா!
எம்மைப் பிரிந்த அன்புத் தங்கமே!
ஆகாயத் தாமரையோ! உன்முக அழகு?
அன்னையின் அரவணைப்பா! உன் அன்பு?
தேன் போன்ற மொழியாலே அப்பாவின்
பிரிவை மறக்க வைத்த பூமகளே!
உன் முகம் பார்க்க எம் மனது
பரிதவிக்கும் அக்கா...... அக்கா......
அதைக் காணாது மறுநொடி துடிதுடிக்கும்
கடலின் கரையினிலே கரையினைத் தேடும்
அலையினைப் போன்று எம் மனது துடிக்கின்றது!
எம் வம்சத்திற்கு வழிகாட்டி உழைத்த
அந்தக் கன்னிப் பருவத்தை மறப்போமா?
ஆருயிர் தந்தை தூரதேசம் சென்று பரதேசம்
சென்ற கதை கேட்டு, கதறியழ எம்மை—நீ
ஆறுதல் வார்த்தை கூறி அரவணைத்தீர்!
அண்மையில் உன் ஆருயிர் அத்தானுடன்
மணமகளாய் வீற்றிருந்த அழகுக் கோலம்
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையுமா?
ஆயிரம் ஆண்டுகள் வாழ்க வென
அன்புடனே கரம் பிடித்த ஆருயிர் அத்தான்
ஆறுதல் தேடி அலைகின்றார்— இவ்வேளை
ஆறுதல் கூற நீ ஓடோடி வருவாய்
என்று ஏங்கித் தவிக்கின்றோம்!!

உன் பிரிவினால் துடிக்கும்

**ஆருயிர் அத்தான் தேவானந்தன்,**
**அம்மா, சகோதரர்கள், உற்றார்,**
**உறவினர்கள்.**

''சிங்கைநகர்'',
புலோலி தெற்கு,
புலோலி. (சி/10760)

## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்,

நிகழும் பிரமாதி வருடம்
தைத்திங்கள் 12ஆம் நாள் (26-01-2000)
புதன்கிழமை முற்பகல் 10.18 மணி முதல் 11.30 மணி வரை
ரும் மீனலக்கினமும் உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

நாதஸ்வர வித்துவான்
அமரர் N. R கோவிந்தசாமி
அவர்களின் புத்திரன்
திருநிறை செல்வன்
**வாகீஸ்வரன்**
அவர்களுக்கும்



சுழிபுரம்
தவில் வித்துவான்
அமரர் S. கிருஷ்ணசாமி
அவர்களின் புத்திரி
திருநிறை செல்வி
**நிலாவதி**
அவர்களுக்கும்

வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தில் திருமணஞ் செய்யப் பெரியோர்கள்
நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம்
வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை விரும்பும்

**திருமதி கோ. தனபாக்கியம்**
குடும்பத்தினர்,
கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

**திருமதி கி. சிவயோகம்**
குடும்பத்தினர்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

வரவேற்பாளர்கள்: நாதஸ்வர வித்துவான்
N. R. கோவிந்தசாமி குடும்பத்தினர்.

▶ இரு வீட்டார் அழைப்பு ◀ (72997)

### இந்தியத் தலைநகர் புதுடில்லியில்

# சுதந்திரதின அணிவகுப்பு ஒத்திகையில் குண்டு மீட்பு

புதுடில்லி, ஜன. 25

இந்தியாவில் நாளை புதன்கிழமை நடைபெற உள்ள சுதந்திர தினக்கொண்டாட்டங்களை முன்னிட்டு தலைநகர் புதுடில்லி உட்பட நாட்டின் முக்கிய நகரங்களின் பாதுகாப்பு திவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தலைநகரில் இடம்பெற உள்ள சுதந்திர தின அணிவகுப்புக்களுக்கான ஒத்திகை நேற்று முன்தினம் நடைபெற இருந்த இடத்திலிருந்து வெடி குண்டு ஒன்று மீட்கப்பட்டதை அடுத்து புதுடில்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

சுதந்திர தின அணிவகுப்பு நடைபெறும் பாதையில் மேலதிகமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

அதேசமயம் —

நேற்று முன்தினம் காலை சுதந்திர தின அணிவகுப்பு ஒத்திகைக்காக ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும். பாடசாலைச் சிறுவர்களும் கூடியிருந்த மத்திய டில்லியில் நேரங் கணித்து வெடிக்க வைக்கும் குண்டு ஒன்றைப் பொலீஸார் மீட்டனர். பின்னர் அக்குண்டு பாதுகாப்பாகச் செயலிழக்கச் செய்யப்பட்டது.

ஒத்திகை ஆரம்பமாவதற்கு அரை மணி நேரம் முன்னதாக 8. 30 மணியளவில் குண்டு கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் நிறுவப்பட்ட 'இந்தியா கேட்' அருகே வீதித் தடைகளுக்காகப் போடப்பட்டிருந்த மரங்களின் பின்னால் பிளாஸ்டிக் சாடி ஒன்றில் மறைத்து இந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்

நாளை நடைபெற உள்ள சுதந்திர தின அணிவகுப்பின் போது அண்மையில் இந்தியாவினால் பரிசோதிக்கப்பட்ட அக்கினி 2 ஏவுகணை உட்பட பல இராணுவ தளபாடங்கள் காட்சியில் இடம்பெற உள்ளன. (இ–6–5)

### உத்தரப் பிரதேச மாநிலத்தில்

# வேலை நிறுத்தம் மேற்கொண்ட 6,300 மின் ஊழியர்கள் கைது

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மின்வாரியத்துறை ஊழியர்களில் 6 ஆயிரத்து 300 பேரை மாநிலப் பொலீஸார் கைது செய்துள்ளனர். மேலும் 2 ஆயிரம் ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மாநில மின்வாரியத்துறையை மூன்று புதிய மின் அமைப்புக்களாகப் பிரிப்பதற்கு மாநில அரசு மேற்கொண்டுள்ள முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். 10 ஆவது நாளாக நேற்றும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்தது.

மாநில அரசும் ஊழியர் சங்கங்களும் தத்தமது நிலைப்பாட்டில் இருந்து விட்டுக் கொடுக்காத நிலை காணப்படுவதனால் இதுவரை இடம்பெற்ற பேச்சுக்கள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. இதனால் சீற்றம் அடைந்துள்ள மாநில அரசு 2 ஆயிரம் ஊழியர்களை வேலை நீக்கம் செய்துள்ளதுடன் 6 ஆயிரத்து 300 ஊழியர்களைக் கைது செய்து சிறைகளில் அடைத்துள்ளது. புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூன்று மின் அமைப்புக்களுக்கும் புதிய ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளும் பணியையும் மாநில அரசு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை—

உத்தரப் பிரதேச மின் ஊழியர்களுக்கு ஆதரவாக மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், பஞ்சாப், டில்லி, மஹாராஷ்டிரம் ஆகிய. ஆறு மாநில மின் ஊழியர்களும் நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். (இ–6–5)

### 1996 இல் அகதிகளுடன் மூழ்கிய

# கிரேக்க கப்பல் விபத்து: 11 பேர் மீது குற்றச்சாட்டு

1996 ஆம் ஆண்டு கிரேக்க கடற்கரைக்கு அப்பால் சட்டவிரோத குடியேறிகளை ஏற்றி வந்த கப்பல் ஒன்று மூழ்கியதில் 283 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக 11 பேர் மீதுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலை வேண்டுமென்றே மூழ்கடித்து பயணிகளைக் கொன்றதாக இவர்கள் மீது கிரேக்க நீதிமன்றில் பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சிலிக்கும் மோல்ற்றாவுக்கும் இடையில் —கிரேக்க கடற்கரைக்கு அப்பால் — இந்தக் கப்பல் கடலில் மூழ்கியது. அச்சமயம் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோதக் குடியேறிகள் 300 பேர் அக் கப்பலில் இருந்தனர். இவர்களில் 283 பேர் கடலில் மூழ்கி மரணமாயினர். ஏனையோர் நீந்திக் கரையேறியதனால் உயிர்தப்பினர்.

கப்பல் மூழ்கத் தொடங்கியதும் கப்பல் உரிமையாளரும் மாலுமிகளும் கப்பலை விட்டுத் தப்பிச் சென்று விட்டனர் என்று கூறப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வந்த கிரேக்கப் பொலீஸார் கப்பல் மூழ்குவதற்கு முக்கிய காரணமாக இருந்த நபர் என்று கருதப்படும் ஒருவர் உட்பட 11 பேரைக் கைது செய்தனர்.

தற்பொழுது அவர்கள் மீது சட்டவிரோத குடியேறிகளை நாடுகளுக்குள் கடத்தியமை, கப்பலை மூழ்கடித்தமை, அப்பாவிகளைக் கொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பான விசாரணைகள் விரைவில் முடிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. [ஐ-6–5[

# தாய்லாந்தில் கெரில்லாக்களால் 500 பேர் பணயக் கைதிகளாகப் பிடிப்பு

பாங்கொக், ஜன.25

தாய்லாந்தில் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த 500 பேரைக் கெரில்லாக்குழு ஒன்று பணயக் கைதிகளாகச் சிறைப் பிடித்து வைத்துள்ளது என்று அறிவிக்கப்படுகின்றது.

மியன்மார் (பர்மா) எல்லையில் உள்ள தமது தளங்கள் மீது தாய்லாந்துப் படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்களை உடன் நிறுத்த வேண்டும் என்று கோரியே 'கடவுளின் சேனை' என்ற இந்தக் கெரில்லாக் குழு வைத்தியசாலையில் உள்ளவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளதாகத் தாய்லாந்து இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

பன்னிரண்டு வயதான இரட்டையர்கள் தலைமையிலான இந்தக் குழு திடீரெனத் துப்பாக்கிகள் மற்றும் குண்டுகள் ஆகியவற்றுடன் வைத்தியசாலையைச் சுற்றிவளைத்து அங்கிருந்தவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துள்ளதாகவும் —

அவர்களது கோரிக்கைக்கு இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் — அவர் மேலும் கூறினார். (6–5)

# ஆப்கான் வெளியுறவு அமைச்சர் பாகிஸ்தானுக்கு விஜயம்

இஸ்லாமாபாத், ஜன. 25

ஆப்கானிஸ்தான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் மௌலவி வாகில் அகமது முக்தாவாகில் பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஆப்கானில் தலிபான்களின் ஆட்சிக்கெதிராக ஐ. நா. பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதை அடுத்து அவர் ஐ. நா. விமானம் ஒன்றிலேயே பாகிஸ்தானைச் சென்றடைந்தார்.

இரு நாட்டு உறவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்புடனும் ஏனைய அதிகாரிகளுடனும் தலிபான் வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்துவார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியை அங்கீகாரம் செய்துள்ள மூன்று நாடுகளில் ஒன்று பாகிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-6.5]

## உலக அரங்கில்

# சமாதானம் வெறும் கனவு

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையில் எத்தனை சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டாலும் கூட பகைமை முற்றாகத் தீர்ந்து விடப்போவதில்லை.

இஸ்ரேலிய உளவுத்துறை அமைப்பான 'மொசாட்'டின் தலைமை இயக்குநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் பேச்சுக்கள் மீது அமைதி ஏற்படும் என்று கூறப்படுவது வெறும் கனவே என்றும் அவர் கூறியுள்ளார்.

# பிரிட்டிஷ் கடற்படை நலிவடைகிறது

உலகின் மிகப்பெரிய கடற்படைகளில் ஒன்றான பிரிட்டிஷ் கடற்படை தன்னைப் பராமரிக்க முடியாத நிலையில் தவிப்பதாக லண்டனில் வெளியான ஆய்வுக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கடற்படையிடம் உள்ள 44 முதல்நிலை யுத்தக் கலங்களில் 36 கலங்கள் போதிய எரிபொருள் விநியோகம் கிடைக்காமையால் துறைமுகங்களில் நங்கூரமிட்டு நிற்கின்றன என்றும் அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-6–5]

# தமிழ்நாட்டில் பெப்ரவரி, மார்ச்சில் நான்கு தமிழீழ ஆதரவு மாநாடுகள்

## சு. ப. வீரபாண்டியன் தெரிவிப்பு

லண்டன், ஜன. 25

தமிழ்நாட்டில் எதிர்வரும் பெப்ரவரி. மார்ச் மாதங்களில் நான்கு மிகப்பெரும் தமிழீழ ஆதரவு மாநாடுகள் நடத்தப்பட உள்ளன.

லண்டனில் இடம்பெற்ற புலிகளின் தளபதி கேணல் கிட்டுவின் நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழக தலைவர்களில் ஒருவரான சு.ப. வீரபாண்டியன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் இந்திய அரசும் வெளியுறவுத்துறை அதிகாரிகளும் பின்பற்றி வந்த வெளியுறவுத்துறைக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும். காலம் மாறிக்கொண்டு இருக்கின்றது. அதற்கேற்ப நாமும் மாறிக் கொண்டிருப்பது அவசியம்.

அந்த வகையில் தென்ஆபிரிக்க அரசுக்கு எதிரான போராட்டத்தில் அந்த நாட்டின் மக்களுக்கு ஆதரவளித்த இந்திய அரசு, பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்கு கைகொடுத்த இந்திய அரசு ஏன் தமிழீழப்போராட்டத்துக்கு ஆதரவளிக்கக் கூடாது?

எனவே இதனை வலியுறுத்தி எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் தமிழகம் முழுவதும் நான்குபெரும் தமிழீழ ஆதரவு மாநாடுகளை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த மாநாடுகளின் போது இந்திய மத்திய அரசுக்கு இரு முக்கிய கோரிக்கைகள் முன் வைக்கப்படும். 'விடுதலைப் புலிகள் மீதான இந்திய அரசின் தடைகளை உடன் நீக்கு'' ''தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அங்கீகாரம் செய் ' ஆகிய இரு கோரிக்கைகளுமே மத்திய அரசின் முன் வைக்கப்பட உள்ளன.

எதிர்வரும் மேமாதம் இந்தியாவில் புலிகள் மீதான தடை முடிவுக்கு வருகின்றது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இந்தத் தடை நீடிக்கப்படுவதைப் போன்று இந்த வருடம் நீடிக்கப்படாது என்றும் —

புலிகள் மீதான தடையை மத்திய அரசு நீக்கும் என்றும் —எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் நாட்டில் மீண்டும் ஈழத்தமிழருக்கு ஆதரவான எழுச்சி ஒன்று உருவாகி வருகின்றது. ஓயாத அலைகள் 3 வெற்றி தமிழகத்தில் பலரையும் உலுக்கி உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ–6–5)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள்; தண்டனையை நிறைவேற்றுக!

## ஐக்கியபொதுவுடைமைக்கட்சிகோரிக்கை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நளினி' சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய நால்வருக்கும் எந்தவித மாற்றமும் இன்றி மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் தமிழ்நாடு பிரிவின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் நாட்டில் புலிகளின் நடமாட்டமும் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன என்று வெளிவரும் செய்திகள் குறித்து மத்திய மற்றும் மாநில அரசுகள் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்தக் கட்சி கோரி உள்ளது.

மரண தண்டனைக் கைதிகளின் தண்டனையைக் குறைக்குமாறு கோரி தமிழக ஆளுநர் பாத்திமா பீவியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கருணை மனுவை அவர் நிராகரித்தது செல்லுபடியற்றது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது தெரிந்ததே.

தற்பொழுது அந்தக் கருணை மனுவைத் தமிழக அரசு ஆராய்ந்து வருகிறது. இதனால் குற்றவாளிகளின் தண்டனை நிறைவேற்றப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. [இ-6-5]

# நாசகாரத் தடுப்பு முகாமில் வைத்து என்னைச் சித்திரவதை செய்தனர்

## வவுனியாவில் கைதான இளைஞன் நீதிமன்றில் வாக்குமூலம்

வவுனியா, ஜன. 25

வவுனியாவில் உள்ள நாசகாரத் தடுப்புப் பிரிவு முகாமில் வைத்து படையினர் என்னை மிகக் கடுமையாகச் சித்திரவதைக்கு உட்படுத்தினர். அதன் பின்னர் எனது சொந்த விருப்பமின்றியே ''நான் ஒரு புலி உறுப்பினர்'' என்று என்னிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டனர்.

மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவரும் தற்போது வவுனியா செக்கடிப் புலவில் உள்ள அரசாங்க ஆட்டுப் பண்ணையில் தொழில் புரிபவருமான வடிவேல் கிருபைராஜன் வயது 28 என்பவர் வவுனியா நீதிமன்றில் அளித்த வாக்கு மூலத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி வவுனியா நாசகாரத் தடுப்புப் பிரிவுப் படையினரால் கைது செய்யப்பட்டு இம் மாதம் 18ஆம் திகதி வவுனியா நீதிமன்றில் இவர் ஆஜர் செய்யப்பட்டார்.

அப்பொழுது தாம் வாக்கு மூலம் அளிக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

அதனை அடுத்து நீதிபதி என். தியாகேந்திரன் அவரது வாக்கு மூலத்தைப் பதிவு செய்தார்.

வடிவேல் கிருபைராஜன் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்ததாவது:—

கடந்த டிசெம்பர் மாதம் பெண் ஒருவர் கொடுத்த தகவலை வைத்து நான் படையினரால் கைது செய்யப்பட்டேன். எனினும் என்னைக் கைது செய்வதற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை.

கைது செய்யப்பட்டவுடன் எனது 'சேர்ட்'டைக் கழற்றி எனது இரு கைகளையும் பின்புறமாகக் கட்டினர். தமது சப்பாத்துக் கால்களால் என்னை உதைத்தனர். அதன் பின்னர் நான் வவுனியாவில் உள்ள நாசகாரத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டேன்.

எனது கண்களைக் கட்டிய அவர்கள் ''நீ புலியா''? என்று கேட்டனர். நான் இல்லைஎன்று பதிலளித்தேன். பின்னர் எனது உடைகளைக் களைந்து விட்டு உள்ளங்கியுடன் என்னைப் படுக்க வைத்தனர். மறுநாள் காலையிலேயே எனது உடைகளை அணிவதற்கு அனுமதிக்கப்பட்டேன்

ஓர் அதிகாரி என்னிடம் வந்து ''நீ புலியா''? என்று கேட்டார். நான் இல்லை என்றேன். அவர் எனது கண்களையும் கைகளையும் கட்டிவிட்டு எனது குதிக்காலில் மூங்கில் தடியால் அடித்தார்.

இரண்டு மூன்று நாள்களின் பின்னர் மற்றொரு அதிகாரி வந்தார். அவர் எனது கன்னத்தில் அடித்து ''நீ. புலிய''? என்று கேட்டார் அப்போதும் நான் இல்லை என்று கூறினேன். அவர் என்னை நிர்வாணமாக்கி எனது கைகளைப் பின்புறமாகக் கட்டி கயிற்றில் இணைத்து மரம் ஒன்றில் தொங்கவிட்டார். சிறிது நேரத்தின் பின்னர் என்னை இறக்கி வாங்கொன்றில் படுக்க வைத்துவிட்டு குதிக்காலில் அடித்தார். அந்த அதிகாரியை குணசிங்க என்று அங்குள்ளவர்கள் அழைத்ததை நான் கேட்டேன்.

### மரத்தில் தொங்கவிட்டனர்

அந்த அதிகாரி பின்னர் எனது கால் பெருவிரல்கள் இரண்டையும் ஒன்றாகக் கட்டி மரத்தில் தூக்கினார். 'சொப்பிங் பாக்' ஒன்றில் பெற்றோல் ஊற்றி எனது தலையில் கட்டினார். எனக்கு மூச்சுத் திணறியது.

அப்போது சிங்களத்தில் எழுதப்பட்ட வாக்கு மூலம் ஒன்றை என்னிடம் தந்து கையெழுத்திடக் கூறினர். நான் எனது சுய விருப்பமின்றியே அதில் கையெழுத்திட்டேன்.

நான் உண்மையில் ஒரு புலி உறுப்பினர் இல்லை. அவர்களுக்கு உதவியதும் இல்லை.

நான் நாசகாரத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அங்குள்ள படை அதிகாரி ஒருவர் என்னைத் தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுத்தினார். இரண்டு இரவுகள் அவர் அவ்வாறு என்னுடன் நடந்து கொண்டார். அந்த வேளைகளில் அவர் மதுபோதையிலேயே இருப்பார்.

என்மீது தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்ட அதிகாரியின் பெயர் அமரசிறி அல்லது அமரசேகர என்று நினைக்கின்றேன். அவரது பெயரின் முற்பகுதி அமர என்பது மட்டும் எனக்கு நிச்சயம் தெரியும். அவரை நேரில் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

இவ்வாறெல்லாம் நடைபெற்றுள்ளதால் என்னைக் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் சமர்ப்பித்து எனது உடல்நிலை பற்றிய அறிக்கையை நீதிமன்று பெற வேண்டும்.

இப்படி அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (இ-6)

## தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா

தியாகராஜ சுவாமிகளின் 153 ஆவது ஆராதனை விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் யாழ். பல்கலைக்கழக நுண்கலை மண்டபத்தில் நடைபெறும்

இந்த விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## பஸ் சேவை நீடிப்பு

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து தினமும் மாலை மூன்று மணிக்குப் புறப்பட்டு கொடிகாமம் ஊடாகச் சாவகச்சேரி வரை நடத்தப்படும் பஸ் சேவை தற்போது கைதடி கோப்பாய் ஊடாக கோண்டாவில் டிப்போ வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் தினமும் காலை 6.00மணிக்கு கோண்டாவில் டிப்போவிலிருந்து புறப்பட்டு மருதனார்மடம், கோப்பாய், கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஊடாக பருத்தித்துறைக்கு செல்கிறது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக இரவுத் தரிப்புக்காக கோண்டாவில் டிப்போவுக்கு செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## தென்மராட்சி தெற்கில்

# ரூ. 15 கோடி பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கடலில்

தென்மராட்சி, ஜன. 25

தென்மராட்சி தெற்குப் பகுதியான தனங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டி, நாவற்குழி ஆகிய கரையோரப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர்களின் 15 கோடி ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கடலில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன என்று மீனவர் சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் வசித்த 410 குடும்பங்களைச் சேர்ந்த 690 கடற்றொழிலாளர்கள் உபகரணங்களைக் கைவிட்ட நிலையில் தொழில் செய்ய முடியாது இருந்து வருகின்றனர் என்றும்—

வீடுகளைப் பார்வையிட இன்னமும் அவர்கள் அனுமதிக்கப்படாததால் வீடுகளில் உள்ள பொருள்கள், கால்நடைகள் குறித்தும் அவர்கள் கவலை அடைந்துள்ளனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ--117)

# குழந்தைகளின் ஆரம்பக் கல்வியே நல்லசமுதாயம்உருவாக உதவுகிறது

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 25

இன்றைய நிலைகளால் ஒரு தலைமுறையே பாதிக்கப்பட்டுள்ளது. எதிர்காலம் சிறுவர்களின் கைகளில் எனக் கூறிக்கொள்ளும் நாம் அவர்களை அதற்கு ஏற்றவாறு வழிநடத்திச் செல்ல வேண்டும். குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் இருந்து நாம் கொடுக்கும் கல்விதான் ஒரு நல்ல சமுதாயத்தைச் சிருஷ்டிக்க வழியமைக்கும்

இவ்வாறு பாலர் விளையாட்டு பாலர் கதைகள் நூல் வெளியீட்டு விழாவில் பேசிய யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் கூறினார்.

''பாலர் விளையாட்டு'' மற்றும் ''பாலர் கதைகள்'' நூல் வெளியீடு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கலாநிதி சபா. ஜெயராசா எழுதிய மேற்படி இரு நூல்களையும் வெளியிட்டுப் பேசிய வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் மேலும் கூறியதாவது:

சுகாதார சேவை என்பது நோய்கள் வருமுன் காப்பதே. நோயற்றவராக மட்டுமன்றி உடல்உள ரீதியான தாக்கங்களுக்கும் உள்ளாகாதவரே உண்மையில் நல்ல ஒரு சுகதேகி.

நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டத்தின் கீழ், எமது பகுதியில் உள்ள மக்களுக்கு மட்டுமன்றி குடாநாட்டின் சகல பகுதி மக்களுக்குமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது குழந்தைகளுக்கு ஏற்ற கல்வியை வழங்கும் வகையில கலாநிதி சபா. ஜெயராசாவின் இந்த நூல்களை யுனிசெவ் உதவியுடன் எமது குழந்தைகளுக்கு வழங்கியுள்ளோம். பாலர் பாடசாலை ஆசிரியர்கள் இதனை உரிய முறையில்பயன்படுத்த வேண்டும் — என்றார்.

மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

எமது பிரதேசம் மிக மோசமான சூழ்நிலைகளைச் சந்திக்கும் வேளைகளில் யுனிசெவ் நிறுவனத்தின் உதவிகள் பல வழிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சஞ்சீவி இதழில் அதன் சேவைகள் குறித்த தகவல்கள் வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

எமது எதிர்காலப் பிரசைகளான பாலர்களை முறையாக வளர்க்க வேண்டும். சிறுவயதில் அவர்களது நினைவுகளில் பதிவாகும் நிகழ்ச்சிகளே அவர்களின் எதிர்கால விளைவுகளை உருவாக்குகிறது. எனவே அவர்களது விடயத்தில் விசேட அணுகுமுறைதேவை, வாழ்க்கை பற்றிய பயன்களை அவர்களது கல்வியில் சேர்க்க வேண்டும்.

பாலர் விளையாட்டு, பாலர் கதைகள் என்ற இந்த நூல்கள் சமுதாயத்தில் அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை அவர்களின் மனதில் இலகுவாகப் பதியவைக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளன. ஒழுக்கமற்றவர்களிடையே அவர்கள் வாழும் போது பலசங்கடங்கள் உருவாகும். அமைதியான சூழலை வழங்குவதே அவர்களுக்கு இன்றியமையாததாகும் என்றார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன் பேசும்போது, மாறுதலான போக்கில் செல்லும் கலாசாரத்தை ஒழுங்கமைத்துக் கொள்ள இப்படியான நூல்கள் தேவை. மாநகரசபையின் முயற்சியில் வழமையாக நல்லைக் கந்தன் மலர் வெளிவருகிறது. அதனூடாக ஒரு நல்ல சமுதாயம் வளர வேண்டும் எனக்கூறுகிறார்கள். இன்று பாலர் கல்விக்கான நூல்களும் வெளியிடப்படுகின்றன இது காலத்தின் தேவை.

பிள்ளைகளுக்கு இப்போது நல்ல சுதந்திரம்உள்ளது. எப்போதோ ஒருகாலத்தில் எமக்குச் சுதந்திரமானநிலை ஏற்படலாம். அப்போது எமக்கு பல நூல்கள்அவசியம்தேவை. இதுபோன்ற மேலும் பல நூல்களை கலாநிதி சபா. ஜெயராசா போன்ற பலரும் வெளியிட வேண்டும். 'யுனிசெவ்' வின் பல உபயோகமான திட்டங்கள் குறித்து சஞ்சீவியிலும் வருகிறது. பத்து வருடங்களாக அது ஆற்றிவரும் சேவைபாராட்டுக்குரியவை— என்றார்.

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோ. சி. வேலாயுதம் கலாநிதி சபா. ஜெயராசா இ. இரத்தினசிங்கம், அ. யேசுரத்தினம் ஆகியோரும் பேசினார்கள்.

யுனிசெவ் திட்ட அலுவலர் திருமதி பெனிபுறுன் வைத்திய கலாநிதி தெய்வேந்திரனிடம் இருந்த நூல்களின் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார். [இ-111-10]

# மண்கும்பான் பாடசாலை மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். மண்கும்பான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மீண்டும் இயங்குகிறது.

1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு மூடப்பட்டிருந்த இப் பாடசாலை கடந்த தைப்பூச தினத்தன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இப் பாடசாலை மண்கும்பான் மேற்கு செல்லையா சிவலிங்கம் இல்லத்தில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் க. குமரேஸ்வரநாதன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக வேலணை உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினமும், தீவக கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. இராதாகிருஷ்ணனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க-30)

# 14 படுக்கைகள் வசதி கொண்ட மகப்பேற்றுக் கட்டடம்

## சங்கானையில் திறந்து வைப்பு

சங்கானை, ஜன. 25

சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலையில் 14 படுக்கை வசதிகளைக் கொண்ட புதிய மகப்பேற்றுக்கட்டடம், கடந்த புதன் கிழமை, சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் (செல்வி) உ. சிவபாத சுந்தரத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ரூபா40 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்த விடுதி, சங்கானை, சண்டிலிப்பாய். பண்டத்தரிப்பு மக்களுக்கும் பிரசவத் தாய்மார்களுக்கும் கூடிய நன்மை அளிக்கும் என பிரதி மாகாணப் பணிப்பாளர் தமது உரையில் தெரிவித்தார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத்தலைவர் மு. பத்மநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இந்த விடுதியில் பிறக்கும் முதல் மூன்று குழந்தைகளுக்கும் 31-01-2000த் தில் பிறக்கும் குழந்தைக்கும் வங்கி வைப்புப் பணம் வழங்குவதற்கு 1000 ரூபா பொதுமக்களினால் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

(இ-29)

## காய்ச்சல் பரவுகிறது

பளைப் பிரதேசத்தில் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதனால் நடமாடும் வைத்திய சேவையைப் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

கிராமம், கிராமமாகச் சென்று நோயாளர்களுக்கு வைத்திய அதிகாரி மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்தும் வழங்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பளை இந்திராபுரம் கிராமத்தில் நடைபெற்ற நடமாடும் வைத்திய சேவையில் நூற்றுக்கும் அதிகமான மக்கள் சிகிச்சை பெற்றனர். (இ-117)

உதயன்

## தடுக்க முடியாதா?

கடந்த வாரு இறுதியில் கொலன்னாவ பகுதியிலும் கம்பஹா மாவட்டத்திலும் திடீரென ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் மக்கள் மனிதாபிமானமற்ற முறையில் துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால் அவர்களின் தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்டு, இம்சைப்படுத்தப்பட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் கூட அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டு இம்சிக்கப்பட்டனர். பெண்கள் இரவு உடைகளோடு ''வீடியோ'' படம் எடுக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தகவல்.

விடுதலைப் புலிகளை, தற்கொலைக் குண்டுதாரிகளைத் தேடுவது என்ற பெயரில் கொலன்னாவ, கம்பஹா பிரதேசங்களில் வாழும் சகல தமிழர்களும் சந்தேகப் பிராணிகளாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் வகை தொகை இன்றிக் கைது செய்யப்படுவதும், அவர்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தடுக்கப்பட்டு இம்சிக்கப்படுவதும் அரசாங்கத்தின — பொலீஸ் மற்றும் ஆயுதப் படைகளின் — வழமையான நியமமாகிவிட்டன.

ஒரு பிரதேசத்தின் பாதுகாப்புத் தொய்ந்து போனதும் அதற்குப் பதிலடியாக — வஞ்சம் தீர்ப்பது போல — தமிழ் மக்கள் பண்பற்ற, மானிதாபிமானமற்ற முறையில் இம்சிக்கப்படுவது இப்போது கண்கூடு.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த காலத்திலேயே பாதுகாப்புப் படையினர் தமது தரப்பில் உள்ள பலவீனத்தைத அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் மீதான இம்சை நடவடிக்கைகளாகவும் தொல்லைப்படுத்தல்களாகவும் மாற்றி இருந்தனர்.

அவ்வேளை எதிரணியில் இருந்த இப்போதைய ஆளுங் கட்சி, தமிழர்கள் மீது கரிசனை கொண்டிருப்பதாகக் காட்டிக் கொண்டுத்து வந்தது. ஆனால் இன்று அதனது ஆட்சியிலே தமிழர்கள் எல்லோருமே சந்தேகப் பிராணிகளாகப்பட்டு வேவலப்படுத்தப்படுகிறார்கள். மிக மிக மோசமாக அவர்களின் அடிப்படை உரிமைகளும் நிம்மதியாக வாழும் சுதந்திரமும் பறிக்கப்படுகின்றன

ஆதாரமோ அடிப்படையோ இல்லாமல் சகல தமிழ் மக்களையும் சந்தேக நபர்களாக்கி அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி தண்ணீர், உணவு தானும் உட்கொள்ள முடியாதவாறு இம்சிக்கும் நிலை—தமிழர்களை மக்களாக அன்றி மாக்களாக நடத்தும் நிலைமை — இப்போது உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் தமிழ்க் கட்சிகள் பலவும் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குகின்றன. ஆனால் அரசாங்கம் தொல்லை தவிர்ப்புக் குழு ஒன்றைப் பொம்மைக்கு வைத்திருப்பது போல, தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் இம்சை செய்யப்படுவது குறித்து பெயருக்குக் கண்டன அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன! அறிக்கைகளாலும் கடிதங்களாலும் எதனைச் சாதித்துவிட முடியும்?

தமிழ்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து இதற்கு எதிராக அர்த்தமுள்ள வகையில் போராடித் தடுக்க முடியாதா? எல்லா விடயங்களிலும் வேறுபட்டுப் பிரிந்து நிற்பது போல தமிழ் மக்களைக் கீழ்மைப்படுத்தும் போதும் கன்னை பிரிந்து நிற்பது தருமமா? தலைவர்கள் தங்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்க்கட்டும்; செயற்படட்டும்.

# பிரச்சினைகள்கஷ்டங்கள்மத்தியிலும் கலை, கலாசாரம் அழியாதிருக்கும்

## சண்டிலிப்பாயில் நடந்த கலைவிழா எடுத்துக் கூறியது

எத்தனையோ வழிகளில் இன்னல்கள் நேரலாம். இடர்கள் வரலாம். அழிவுகள் ஏற்படலாம். ஆனாலும் எங்கோ ஒரு மூலையில் பதுங்கி, தப்பிக்கிடக்கும் ஒரு சிறு பொறி மீண்டும் சிறிதாகச் சுடர் விட்டுப் பெரு நெருப்பாக வளர்ச்சி காணும். இது இயற்கையின் நியதி.

தமிழ் இனத்தினை அழிப்பதற்கும் அவர்களின் பாரம்பரிய கலாசாரத்தைச் சீரழிக்கவும் காலங்காலமாக அந்நியர்களாலும் ஏன் நம்மவர்களாலும்கூட எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவியமை வரலாற்று உண்மைகள்.

இக்காலத்தில் ஈழத்தமிழர் மத்தியில் ஏற்பட்டுவரும் அழிவுகள், கஷ்டங்கள், பிரச்சினைகள், சீரழிவுகள் யாவும் அவர்களின் கல்வி, கலாசாரம், பாரம்பரியம், கலைகள், பண்பாடுகள் யாவற்றையும் முற்று முழுதாக விழுங்கி இல்லாதொழித்து தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பதற்குத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளாக வேகருதப்படுகின்றன.

இச் செயற்பாடுகளால் தமிழர்கள் தம் தனித்துவத்தை இழந்து விடமாட்டார்கள். அவர்களின் கலைகள், பண்பாடுகள், கலாசாரங்கள் அழிந்துவிட மாட்டா, எந்தச் சக்தியாலும் அவற்றை ஒழித்து விடவும் முடியாது என்பதை ஆணித்தரமாக எடுத்துக்காட்டிய நிகழ்வாக வலிகாமம் தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் கடந்த 16ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் மகா வித்தியாலயத்தில் நடத்திய புத்தாண்டு கலைவிழா நிகழ்ச்சிகள் அமைகின்றன.

புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர், பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் கலை விழா ஒன்றினை நடத்தினர்.

அன்றைய தினம் பிரதேச செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் தமிழ்ப் பாரம்பரிய கோல உடையுடன் காட்சியளித்தமை எல்லோராலும் விரும்பி வரவேற்கப்பட்ட காட்சியாக இருந்தது.

தமிழர்தம் பெருமையைச் சுட்டிநிற்கும் கலைகளான முத்தமிழ்களான இயல், இசை, நாடகம் என்பன தமிழ் மன்னர்கள் காலத்தை நினைவூட்டி நின்றன.

மண்டபம் கொள்ளாப் பார்வையாளர் மத்தியில் இடம்பெற்ற வரவேற்பு நடனம், கதம்ப நிகழ்வு, கவிதை, நாடகங்கள், இன்னிசை, நாட்டிய நாடகம், இசைநாடகம், தென்மோடி நாட்டுக்கூத்து, கரகம் என்பன எல்லோரதும் நெஞ்சைவிட்டகலாது பசுமை நிறைந்த மனதுகளோடு பார்வையாளர்களை மண்டபத்தை விட்டு வெளியேற வைத்தன.

எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் சொத்துக்களான கலைகளை நாம் பேணிவளர்க்கவேண்டும்

அந்நிய கலாசார மோகத்தில் நம் இளைஞர்கள் மூழ்கி,

தொகுப்பு: **வி. பி. சர்மா**
வலி. தெற்கு செய்தியாளர்

தமிழ் பண்பாடுகளை மறந்து, கலாசார சீரழிவுகளை எதிர்நோக்கியுள்ள எம் இனத்தின் இளம் தலைமுறைகளின் போக்கினைத் திசை திருப்பவும் சிந்திக்கவைக்கவும் பிரதேச செயலகத்தினரின் இக் கலை விழா நிகழ்வுகள் முயற்சித்துள்ளன எனக் கூறலாம்.

புலம் பெயர்ந்த மக்கள் கூடத் தாம் சென்றமர்ந்த நாட்டில் தமிழரின் கலை கலாசார பாரம்பரியங்களைப் பேணி வளர்க்கத் தலைப்பட்டு வரும் வேளையில்—

தாயகத்தில் உள்ள இளைஞர் யுவதிகள் அந்நிய நாகரிக மோகவலையில் சிக்குண்டு சீழிந்து வரும் நிலையில்—

இக்கலைவிழாவில் ஆர்வத்துடனும் துடிப்புடனும் கலந்து கொண்ட பல இளம் கலைஞர்கள், மற்றும்ரசிகர் கூட்டத்தினரைக் ஆகியோரைக்கண்ட போது எதிர்காலத்தில் எமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட்டு வளர்ச்சியடையும்என்ற தெம்பினைத் தருகின்றது.

மானிப்பாய் கண்ணன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பித்த கலைவிழா காலை மாலை என இருநிகழ்வுகளாக இடம்பெற்றது.

சரியாக குறிக்கப்பட்ட நேரத்தில்— சைவப் பாரம்பரிய முறைப்படி— மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார் பிரதேச செயலர்.

மானிப்பாய் கலைக்கோயில் மாணவர்களின் வரவேற்பு நடனம், அ. அமிர்தலிங்கத்தின் வரவேற்புரை ஆகியவற்றுடன் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

தென் இந்தியத் திருச்சபை வண. பிதா ஆ. யேசுதாசன் அடிகளார், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ப. ஜெயானந்தக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகள் விழாவுக்கு பலம் சேர்த்தன.

கிராம அலுவலர் இரா. துரைராசா 'புத்தாயிரமே வா...வா...' என கவிதை மொழியில்வரவேற்புக்கவிதை வழங்கினார்.

இவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற மானிப்பாய் வாழ்வகம் — விழிப் புலன் இழந்தோர் இல்லத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் கதம்ப நிகழ்வு பார்ப்போரின் உள்ளங்களை நெகிழ வைத்தது.

புறக்கண்கள் செயலற்றிருந்த போதிலும் இறைவன் கொடுத்த ஞானக் கண் — ஊனக்கண் — வாயிலாக எம் உள்ளத்தோடும், ஓடும் உதிரத்தோடும் உறவுகொண்டு சங்கமித்த அந்த நிகழ்வு —

வாழ்வகத்தோடு அன்றாடம் இணைந்த செயற்பாடுகளை விளக்கும் நிகழ்வுகளாய் அமைந்திருந்தன.

வாழ்வகப் பாடகர் கு. ஜெகநீசனின் பாடல் ரசிகர்கள் மனதை கொள்ளை கொள்ள, பிரதேச செயலர் சந்திரராசா அவருக்குத் தங்கப் பதக்கம் அணிந்து கௌரவித்தார். வாழ்வகப் பொறுப்பாளர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி பாராட்டப்பட வேண்டியவர்.

அடுத்து இடம் பெற்றது இணுவில் இளந்தொண்டர் சபை வழங்கிய 'மயான காண்டம்' நாடகம். அளவாக— உணர்வாக — உரப்பாக அமைந்து ஆடாமல் அசையாமல் கண்விழித்து பாத்திருந்த பார்வையாளர் பலரை இடையிடையே கண்ணில் பனித்த நீரை தட்டிவிடவும் துடைத்து விடவும் செய்தன.

கம்பீரமான—கணீரென்ற - தொனியுடன் கூடிய சுந்தரத் தமிழில் சிறில் சுதந்திரன் வழங்கிய கலைவிழா நிகழ்வின் வர்ணனைகள் பார்வையாளர்களை நிகழ்வுகளுடன் ஒன்றிணைத்து சங்கமமாக்கி ரசிக்க வைத்தன.

மாலை நிகழ்வுகளாக நடைபெற்ற திருமதி செல்வாம்பிகை வீரசிங்கத்தின் நெறியாள்கையில் மானிப்பாய் கலைக்கோவில் மாணவர்களின் 'குற்றாலக் குறவஞ்சி' நாட்டிய நாடகம் கவர்ச்சியாக—கச்சிதமாகஅமைந்தது.

செல்வி ஸ்ரீதேவி சந்திரராசாவின் நெறியாள்கையில் குறவர் நடனம் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்ற நாட்டிய நாடகம் என்பனவும் சிறப்பாக இருந்தன.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்களின் சத்தியவான் - சாவித்திரி நாடகம், கீரிமலை நகுலேஸ்வரா மாணவர்களின் 'வேதநூல்' (தென்மோடி நாட்டுக்கூத்தும் கரகமும்) என்பன பாராட்டைப் பெற்றன.

இறுதி நிகழ்வாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலர்கள் மேடையேற்றிய 'வெளிநாட்டு மாப்பிள்ளை' நாடகம் ரசிகர்களை 'சபாஷ்' போட வைத்தது.

றோகா ஆட்ஸ் சவுண்ட் சேவிஸ் சாரின் ஒலி - ஒளி அமைப்புக்கள் நேர்த்தியாக இருந்தன.

நீண்டகால இடைவெளிக்குப் பின் புத்தாண்டு நிறைவின் பெருமிதத்தோடு — இசைத்தேன்கூட்டில் சில துளிகளை அள்ளிப்பருகிய மகிழ்வோடு மண்டபத்தை விட்டு வெளியேறிய பார்வையாளர்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச பிரிவினரின் நன்றிகளை பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் க. ஸ்ரீபதி கூறி கொண்டாட்டங்களை நிறைவு செய்தார். ★

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை10 மணிக்கு மேற்படி கூட்டம் நடைபெறும். [௧]

## நாளை

தை 12

புதன்கிழமை

திதி: ஷஷ்டி

வைகறை 4.51 வரை

நட்சத்திரம்: அத்தம்

பின் இரவு 2.50 வரை.

சுபநேரம்: 5.06—6.36

ராகுகாலம்: 12.36—2.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# கஷ்டப் பிரதேச சேவைக்கு கொடுப்பனவு இன்னும் இல்லை

## ஆசிரியர்கள் பணிப்பாளருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 25

கல்விக் கல்லூரியில் பயின்று கடந்த ஒருவருட காலமாக கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றிவரும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் சிலருக்கு கஷ்டப் பிரதேசத்தில்சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மேலதிக கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசாவுக்கு கடந்த 19ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

நாம் கல்விக் கல்லூரியில் இருந்து சித்தியடைந்து வெளியேறி 99 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெற்று, இன்று வரை வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளில், பயிற்றப்பட்ட நிரந்தர ஆசிரியர்களாகக் கடமையாற்றிவருகின்றோம்.

எமக்கு இதுவரை கஷ்டப் பிரதேசத்தில் பணிபுரிவதற்கான மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. நாம் ஏற்கனவே பல தடவைகள் இது குறித்து உரிய முறையில் தங்களுக்கு அறிவித்து வந்துள்ளோம்.

கல்விக் கல்லூரியில் பயிற்சியைப் பூர்த்தி செய்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய பகுதிகளில் கடமையாற்றும் எமது சக ஆசிரியர்களுக்கு நியமனத் திகதியில் இருந்தே மேற் குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கொடுப்பனவை இனிவரும் மாதங்களிலாவது நாம் பெற வழி செய்யுமாறும் ஒரு வருடமாக வழங்கப்படாதிருக்கும் நிலுவைகளையும் சேர்த்து எமக்கு வழங்கி உதவுமாறும்வேண்டுகின்றோம்— என்று குறிப்பிடப்பட்டுள்ளது

### உதய வாக்கு

அழகு களிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ, அதைப் போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது.

— அண்ணா

## கைதிகளைப் பார்வையிடுவார்

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான என். ஜீவேஸ்வரா நாளை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார். (இ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறி விட்டது

நேற்று [24-1-2000] காலை 6 மணியளவில் சுதுமலை தாவடி வீதிக்கு இடையில் தங்கநகை (தாலிக்கொடி) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திரு. அ.சிவராசா, சுதுமலை கிழக்கு, அரசடி ஒழுங்கை, மானிப்பாய் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(73023)

## விற்பனைக்கு

பொமெரேனியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தினேஸ், இலங்கை வங்கி அருகில், மானிப்பாய்.

(72935)

## ஜோதிடம்

கணனி மூலம் தமிழில் ஜாதகங்களைத் துல்லியமாகக் கணிப்பதற்கும் பலனை அறிவதற்கும் எண் ஜோதிடம் பார்ப்பதற்கும் பிறந்தநேரம், ஊர், பெயர் இவற்றுடன் தொடர்பு கொள்ளும் முகவரி: க. கிருபானந்தக் குருக்கள், பருத்தித்துறை வீதி, கிராம்புவில், சாவகச்சேரி. TP & FAX 070—212300

[73020]

## படிவம்

ஆசிரிய கலாசாலை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி 2000-02-07, படிவம் ரூபா 3.00, தபால் உறை ரூபா 1.00. பாரதி 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10758)

## மணமகன் தேவை

28 வயது மிருகசீரிடம் இடபராசி 8 இல் செவ்வாய் கிரகபாவம் 56 பட்டதாரி ஆசிரியைக்கு சைவ போசனமுடைய மணமகன் தேவை. தொடர்பு கொள்க: பொன்னம்பலம் 465/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(73027)

## தென்னம் நாற்றுகள்

உடன் நடுகைக் குகந்த (குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய வத்தாவிகள் உட்பட) தென்னம் நாற்றுகளும் அத்துடன் அம்பலவி, கிளிச்சொண்டன், விலாட் மாங்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. மு. காங்கேசு, ஐயர் கடையடி, கண்டி வீதி, மீசாலை.

(சி/10739)

## திருத்திக் கொடுக்கப்படும்

சகலவித கெமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஸ் கண், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத் துறை சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக்கொடுக்கப்படும். கு. நாராயணசாமி இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி. (கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்)

(73032)

# கலந்துரையாடல்

யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவன மாணவர்ஒன்றிய அனைத்து மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல்

இடம்: நிறுவன கேட்போர் கூடம்
நாள்: 26-01 2000
நேரம்: காலை 9.00 (புதிய நேரம்)

அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்,
உயர் தொழில்நுட்ப நிறுவனம்.

(73038)

# கண்ணீர் அஞ்சலி

கடந்த 23—01—2000 அன்று அகாலமரணமடைந்த

## கந்தையா குணசேகரம்

(அரியாலை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர்)

அவர்களின் மறைவையொட்டி துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், அங்கத்தவர்,
பணியாளர்கள்

அரியாலை பனை, தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(73036)

# நினைவஞ்சலி

## 3 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு



அமரர்
**இலங்கையர் வேலாயுதம்**
மண்ணுலகம் 03-11-1921
விண்ணுலகம் 30-05-1996

திருமதி
**வேலாயுதம் பரமேஸ்வரி**
மண்ணுலகம் 21-06-1930
விண்ணுலகம் 05-02-1999

அன்பின் உறைவிடமாய் அரவணைப்பின் அமைவிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் இருந்து எமையெல்லாம்
ஆறாத்துயரில் மூழ்க வைத்து விண்ணுலகம் சென்றீரோ
ஆறவில்லை எம் நெஞ்சம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(73018)

உ

திருவருள் மிகு

# பன்னாலை சிவபூதவராயர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தைத்திங்கள் 12 ஆம் நாள் (26-01-2000) **புதன்கிழமை மாலை 3.00 மணியளவில்** பாலஸ்தாபனம் தொடர்பான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி வியாழக்கிழமை காலை 9.30க்கு மேல் 10 மணிக்குள் வரும் சுபவேளையில்

## "பாலஸ்தாபன கும்பாபிஷேகம்"

நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

எனவே அன்பர்கள், அடியார்கள் யாவரும் இத்தினங்களில் பங்குபற்றிப் பெருமானின் அனுக்கிரகத்தினைப் பெற்றுய்யும் வண்ணம் அன்பு கூர்ந்து வேண்டுகின்றோம்.

மேலும் வருடாந்த வைகாசி மாத உற்சவத்தின் முன்னர் திருப்பணி தொடர்பான வேலைகளை நிறைவு செய்து, வெகு விரைவில் கும்பாபிஷேகத்தினை மேற்கொள்வதற்கு மனப்பூர்வமாகத் தங்களால் இயன்ற பண உதவி, சரீர உதவி, பொருள் உதவி என்பன தந்து ஒத்துழைப்பை நல்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: பண உதவி நல்குவோர் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொண்டு அதற்குரிய பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்வது விரும்பத்தக்கது.

சுபம்!

ஆலய பரிபாலன சபை,
சிவபூதவராயர் ஆலயம், பன்னாலை.

(73031)

# PATRICIAN INSTITUTES

# பற்றீஷன்

## தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்ப பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

## ஆரம்பம்: 01-02-2000

1) A. Diploma in Ms - Office
   B. Certificate Courses
   - 1) MS - Word - 2000
   - 2) MS - Excel - 2000
   - 3) MS - Access - 2000
   - 4) MS - Power Point
   - 5) Visual Basic Vr. 6
   - 6) C++
   - 7) Pascal
   - 8) d Base
   - 9) Lotus 1-2-3

2) General Motor Mechanism
   Duration 6 Months
   இப் பயிற்சி நெறி குறைந்த காலத்திலும் விவரமாகவும் கற்பிக்கப்படும். அத்துடன் பொதியளவு செய்முறைகளும் வழங்கப்படும்.

Note: இப் பயிற்சி நெறியினைப் பயின்ற மாணவர்கள் பரீட்சை எடுக்காதவர்களை உடன் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

3) General Electrician.
   Duration 6 Months
4) Radio & T. V. Repairing.
5) Short - Hand & Typing
   (English & Tamil)
6) City & Guilds International.

## LONDON EXAMINATION — 2000

**திறந்த பல்கலைக்கழகங்களில், தொழில் நுட்பக் கல்லூரி**

**A/L கணிதப்பிரிவு மாணவர்களுக்கு**

World Class Engineering Qualification பெறவும்

London பல்கலைக்கழகங்களில் Degree பயில்வதற்கும்

## அரிய வாய்ப்பு!

DIPLOMA IN ELECTRICAL,
ELECTRONICS,
TELECOMMUNICATION ENGINEERING

தகுதிகாண் பரீட்சை ஒன்றின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

பெப்ரவரி மாத முடிவிற்குள் விண்ணப்பிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:

**REGISTRAR**
PATRICIAN INSTITUTES
59, St. Patricks Road, Jaffna.

(C/10782)

# தற்கொலை செய்வோர் எண்ணிக்கை குடாநாட்டில் அதிகரித்துச் செல்கிறது

## மனநோய் பாதிப்பே பிரதான காரணம் எனத் தெரிவிப்பு

வலி.வடக்கு, ஜன. 25

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது. இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் 75 சதவீதமானோர் மனநோய்க்கு உள்ளாகிச் சீரான முறையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்படாத நிலையில் மரணத்தைத் தேடிக்கொண்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் சட்டத்தரணியும், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதியுமானமு.சபாநாதன்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற பொங்கல் விழா மற்றும் கொட்டகைத் திறப்பு விழா ஆகியவற்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே பதில் நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற சகலருமே ஏதோ ஒரு வகையில் மனப்பாதிப்புக்கு உள்ளாகிய நிலையிலேயே வாழ்கின்றனர். அவர்களில் சிலர் மனத்தாக்கத்தின் அளவு அதிகரித்த நிலையில் வைத்தியசாலைகளை நாடவேண்டிய நிலையில் வாழ்கின்றனர்.

அவர்களை நாம் புறக்கணிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்களுக்கும் கூட வழங்க வேண்டிய மருத்துவத்தை வழங்குவதுடன், சமூகத்திலும் மதிப்பும், மரியாதையும் கொடுத்து அவர்களையும் வாழ்வதற்கு ஏற்றவழிவகைகளையும்செய்ய வேண்டும்.

இன்று எமது பகுதியிலேயே டாக்டர்களுக்கு பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்த நிலைமையில் எமது பிள்ளைகள் எமதுபகுதியில் கற்று விட்டு உள்ளகப் பயிற்சிக்காக தென்பகுதியை நாடிச் செல்கின்றனர். இது மிகவும் கவலைப்படவேண்டியதாகும்.

தென்பகுதியாக இருந்தால் அரசினுடைய பல்வேறு உதவிகளும் இந்த வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்று இருக்கும். ஆனால் வடபகுதியில் இந்த வைத்தியசாலை அமைந்து இருக்கின்றமையினாலேயே வைத்தியசாலைக்கு கிடைக்கவேண்டிய உதவிகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

குறிப்பாக தற்கொலை செய்து கொள்பவர்களில் - உதாரணமாக பத்துப்பேரை எடுத்துக்கொண்டால்— அவர்களில் எட்டுப்பேர் மனமுடைந்து போன நிலையிலேயே தற்கொலை செய்து கொள்கின்றனர்.

டாக்டர்களை மட்டும் இத்தகைய மரணங்களுக்கு குறை கூறுவதில் பயன் இல்லை. எமமைத்தான் குறைகூற வேண்டும்.

எமது அயலில் அல்லது வேறோர் இடத்தில் இத்தகைய நோயாளர்கள் காணப்பட்டால் அவர்களை அனுசரித்து வைத்தியசாலையில் சேர்க்க வேண்டியது, உதவி செய்யவேண்டியதும் நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பணந்தான் இலக்கு என்று நினைத்து வேறு இடங்களுக்கு சேவையாற்றச் செல்வதை டாக்டர்கள் நிறுத்த வேண்டும். வெளிநாடுகள் சென்று கல்வி கற்கலாம் ஆனால் சேவையாற்ற எமது பகுதிக்கே வரவேண்டும். இங்கு கடமையாற்றுகின்ற பேராசிரியர்களின் முன்மாதிரிகளை மாணவர்களும் பின்பற்ற வேண்டும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உளநலப் பிரிவுத் தலைவரும், பேராசிரியருமான தயாசோமசுந்தரம் தமது உரையில்: மாணவர்கள் கல்வியுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. சமூகசேவைகளிலும் முன்மாதிரியாக தொழிற்பட வேண்டும் என்றார்.

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி செல்வி சி. சிவராணி, உளநலச் சங்கத் தலைவர் க. கணபதிப்பிள்ளை, தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி. சிவமகாராசா சட்டத்தரணி பொ. சிவலிங்கம், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 16 ஆம் அணியைச் சேர்ந்த க. பிரதீபன் ஆகியோரும் உரையாற்றினர்.

(ஜ-7-86)

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 — 04 — 1913

உதிர்வு: 09 — 02 — 1996

அமரர்

## சிவக்கொழுந்து இராசேந்திரம்

திதி:- 25- 01- 2000

ஆண்டு நான்காயினும் உங்கள் நினைவலைகள் எமை விட்டு நீங்காது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவ வில்லா,
மானிப்பாய்.

(72990)

---

# முதலாம் ஆண்டு நினைவுகள்



பூவாக: 07 — 05 — 1926

புனிதையாக: 25 — 01 — 1999

## மனுவல் செல்லம்மா (அன்னம்மா)

(காங்கேசன்துறை)

பார்த்திருந்தோம் பாரினிலே இன்றுவரை
ஓராண்டு ஓடி மறைந்ததா? அதற்குள்...!
விழிகள் சொரியச் சொரிய நாம்
விடியும் காலை மலரெடுத்து
தினமும் தொழுகின்றோம் உன்னை
பார்த்திருந்த எம் விழி பாதி கரைந்தது.
நிழலாகத் தெரிகின்றவளோ! அம்மா...
மீண்டும் இங்கு நிஜமாக வந்துவிடு!
உன் தேடுகின்ற விழியையும் - உன்
தாலாட்டு மொழியையும் - உன்
அரவணைக்கும் கரங்களையும் என்று இனிக்காண்போம்
மீண்டும் வந்து விடு தாயே! இவற்றைத் தந்துவிடு.

இன்று காலை 7.00 மணிக்கு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பெரிய விளான் புனித அந்தோனியார் ஆலயத்தில் — திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அழகு நிலா,
கல்லூரி வீதி,
இளவாலை.

(72952)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 10 — 05 — 1947

உதிர்வு: 12 — 12 — 1999

அமரர்

## திருமதி நடராசா இராஜேஸ்வரி

(தலங்களப்பு)

எப்பொழுதும் எங்களுக்காய் எறித்த முழுநிலவை கல்லறையில் வைத்து விட்டு கண்ணீர் வடிக்கின்றோம். பாசத்துக் கினியாளை நீ பறித்து விட்டாலும் வாசல் பார்த்தவளின் வரவுக்காய் காத்திருப்போம். மீண்டும் ஒருமுறை எம் நிலவு முகம் காண்பதற்கு வேண்டும் வரம் தந்தருளும் காரைத்தூர் விநாயகரை நித்தமும் வேண்டுகின்றோம்.

12 - 12 - 99 அன்று அகால மரணமடைந்த வேளையில், வாகன உதவி புரிந்தவர்களுக்கும், சாவகச்சேரி மருத்துவமனை பொறுப்பு அதிகாரி, ஏனைய ஊழியர்களுக்கும், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைத்து உறவினர்கள், நண்பர்களுக்கும் எங்கள் கண்ணீர் கலந்த நன்றிகள்.

இன்று நடைபெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. நடராசா
(கணவன்)
லலிதா, ரஞ்சன், ராதா.
(பிள்ளைகள்)

தற்போதைய முகவரி:
ஏழாலை மேற்கு,
கேணியடி,
ஏழாலை.

(72944)

---

# முதலாம் ஆண்டு நிறைவு நாளும் நற்கருணை வழிபாடும்



அருள்திரு.

## சேவகர் சாமுவேல் தே. அல்பிறட்

(சாம் அண்ணன்)

சகோ. பிலிப்குமார் (பிலிப் அண்ணன்) அவர்களின் சேவகராகத் திருமுன்னிலைப்படுத்தும் பிரதிஷ்டை வழிபாடும் நடைபெறும்.

நாள்: ஜனவரி 26 புதன் (26-01-2000)
நேரம்: பிற்பகல் 3 மணி (புதிய நேரம்)
இடம்: ஆசிரம ஜெபாலயம்

வருக!

- ஆசிரம பரிபாலனக் குழு

கிறிஸ்தவ சேவ ஆசிரமம்,
மருதனார்மடம்.

(72954)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் வைத்திலிங்கம் உருத்திரா

அன்னை வயிற்றிலிருந்து: 25-06-1936

ஆண்டவன் திருவடிக்கு: 26-12-1999

அப்பா!

பாசத்தின் இலக்கணமே! பண்பின் உறைவிடமே! ஆசை மகள் என்னை '' சுவிஸ் '' அனுப்பி வைத்த ஏக்கத்தில் நெஞ்சம் பதறியதோ? நிமிடத்தில் உயிர் பிரிந்ததுவோ? நேசமிகு அப்பாவே நெஞ்சமெலாம் நிறைந்தவரே! வாச மகள் என்னை வாழ்த்த மறந்து நீரும் தூர இடமான சொர்க்கத்தை அடைந்தீரோ? ஆறுமோ எங்கள் மனம் எம் ஆயுள் உள்ளவரை ஓயுமோ உம் நினைவு இவ் உலகம் உள்ளவரை.

அப்பா! நீங்கள் வானிலிருந்து வாழ்த்தும் வாழ்த்தொலியில் எங்கள் வாழ்வு உதயமாகின்றது.

அன்னை நயினை நாகபூஷணி அருள் கொண்டு உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

மனைவி: தங்கலட்சுமி,
மகள்: ஷாமினி, மருமகன்: கரன்
மற்றும் சகோதரர்கள், சகோதரிகள்,
குடும்பத்தினர்.

மானிப்பாய்.

[சி/10781]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 — 01 — 1928

மறைவு 09 — 02 — 1996

## அமரர் சதாசிவம் கனகலிங்கம்

திதி: 25 - 01 - 2000

அன்புத் துணைவராய் பாசமிகு தந்தையாய்
எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் அன்பு நினைவலைகள் எம்மை விட்டு நீங்காது!

குடும்பத்தினர்.

நவரத்தினராஜா வீதி,
கோண்டாவில்.

(73019)

# சபிண்டீகரண அழைப்பு



அமரர்

## நாகலிங்கம் சிவசண்முகநாதன்

(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி,
பல்கலைக்கழக கிளை)

உதயம் 30 - 08 - 1947

அஸ்தமனம் 26 - 12 - 1999

கடந்த 26 - 12 - 1999 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் சிவசண்முகநாதன் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று 25 - 01 - 2000 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்துக்கான பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினர்

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

(73015)

# கைதடியில் அறுவடை விழா

யாழ்ப்பாணம், ஜன. 25

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட உதவியுடனும், சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் கமநலசேவைத் திணைக்களத்தினதும் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களத்தின் தொழிநுட்ப வழிகாட்டலின் கீழ் தென்மராட்சியில் மானாவாரியாகப் பயிரிடப்பட்ட சோளப் பயிர்ச் செய்கையின் வயல்விழா இன்று காலை 9.30 மணிக்கு கைதடி போதனாசிரியர் பிரிவில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்வர். (இ-8)

# விவேகானந்தர் ஜனன தினம்

கொழும்புத்துறை, ஜன. 25

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் சுவாமி விவேகானந்தரின் 138 ஆவது ஜனனதின நிகழ்வுகள் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

காலை 5-30 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் நிகழ்வு ஆரம்பமாகி மதியம் 12 மணிக்கு விசேட பூசையும், அதனையடுத்து பிரசாதம் வழங்கலும் இடம்பெறும்.

சேவாச்சிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும். (இ-30)

# தச்சன்தோப்பு கிளை மீண்டும் இயங்குகிறது

நாவற்குழி, ஜன. 25

இடம்பெயர்வால் மூடப்பட்ட தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் தச்சன் தோப்புக் கிளை மட்டுமே மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் மக்கள் மீண்டும் செல்லும் பட்சத்தில் மூடப்பட்டுள்ள கிளைகள் திறக்கப்படும் என சங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ]

# தீயினால் நாசம்

வலி. கிழக்கு, ஜன. 25

மட்பாண்டம் செய்யும் தொழிலகம் ஒன்று திடீரென தீப்பற்றியதன் காரணமாக உற்பத்திப் பொருள்கள் எரிந்து நாசமாகிய சம்பவம் கல்வியங்காட்டுப் பகுதியில் இடம்பெற்றது. (இ-180)

# நீதிபதிகளுக்கு பயிற்சி நிலையம்

கொழும்பு, ஜன. 25

நீதிபதிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்று கடந்த 18ஆம் திகதி கொழும்பில் உள்ள பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தற்காலிகமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்துக்கான நிரந்தரக் கட்டடம் ஒன்று கோமாகமவில் விரைவில் அமைக்கப்படவுள்ளதாகவும் —

தற்போது புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட 13 நீதிபதிகளுக்குப் பயிற்சி வழங்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் —

பயிற்சி பெறுவதற்காக விண்ணப்பித்த 170 விண்ணப்பதாரிகளில் இருந்தே இந்த 13 பேரும் தெரிவு செய்யப்பட்டனர் எனவும் —

நீதிச்சேவை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (க-7)

# நெஞ்சில் நிறைந்தவர்க்கு அஞ்சலி

தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடியாகத் திகழ்ந்த

## K. ஆனந்தகுமார் BOND MASTER

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கிறோம்.

YARL HALL கல்வி நிலையம்
இரா. செல்வவடிவேல்

(73021)

# ஓராண்டு நினைவஞ்சலி

## செல்வி சுகந்தினி சுந்தரலிங்கம்

மண்ணில் 29-03-1974

விண்ணில் 05-02-1999

திதி: 25-01-2000

ஆண்டொன்று போனதம்மா உன்னையிழந்து
மீண்டும் உன்னைக் காண்பதற்கு என்மனம் —
துடிக்குதம்மா
இத்தனை நாள் இணைந்திருந்து ஏங்கித்தவிக்கவிட்டு
என்னைப் பிரிநத மாயமென்ன?
பாசமென்னும் பெருங்கடலில் நீராடித் திளைக்க
வைத்த ஆசை. நீ அநாதரவாய் விட்டுச்
சென்றாயோ — சுகந்தி
உன்னை நினைத்துத் தவிக்கின்றேன் — உன்
ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்,

உன் நண்பி
உஷா

கோண்டாவில்.

(73024)

# உயிரே.., உனையிழந்து... ஓராண்டு உருண்டதுவோ?



## செல்வி சுகந்தினி சுந்தரலிங்கம்

(சமுர்த்தி உத்தியோகத்தர், உடுவில்)

மண்ணின் நிழலில் 29-03-1974

ஆண்டவன் நியதியில் 05-02-1999

சின்னப் பூவே! எம் சிந்தையிற் கூவிநின்ற
கன்னற் குயிலே! கலைப்பழுதே! காவியமே!
மின்னல் கொடியே! எம் மேன்மை மிகு பொக்கிஷமே!
இன்னல் சுமந்தோம் எங்குற்றாய் கண்மணியே!
உயிரே, உனையிழந்து ஓராண்டு உருண்டதுவோ!
பயிரே. உனையெண்ணிப் பரிதவித்துத்
துடிக்கின்றோம்.

உன் உயர்ந்த ஆத்மா சாந்தியுற எம் அஞ்சலிகள்! இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

நெஞ்சினில் நீங்கா நினைவு கூரும்

தந்தை — சுந்தரலிங்கம், தாய்— சந்திரசேதேவி,
பெரியதாயார் — க. ஈஸ்வரி,
சிறியதந்தை—சிவநாதன்,
சிறியதாயார்—சித்திராதேவி குடும்பத்தினர்,
சகோதரன், சகோதரிமார்,
மாமன் குடும்பத்தினர்,
(வெளிநாடு)

வீ. சீயடி,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(73036)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
திரு. கூ. யேசுதாஸ்
அவர்களின் அன்புத் தாயார்

### சூசைப்பிள்ளை மேரி மாகிறெட்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள்.
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
யாழ். பட்டணக்கிளை.

(சி/10785)

## கண்ணீர் அஞ்சலி

அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்து தன்னலமற்ற சேவையாற்றிய

### கந்தையா குணசேகரம்

அவர்கள்

மரணத்திரையுள் மறைந்து விட்ட அவலமான செய்தியால் இக்கூட்டுறவுச் சமூகம் கண்ணீர்மல்கி நிற்கின்றது. துடிதுடிக்கும் அவர் குடும்பத்தவர்களின் ஆறாத் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம். ஆன்மீக வாழ்வில் நித்தியத்துக்கும் அமைதியை துய்த்திட அன்னவருக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பணிப்பாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.
இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-01-2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல. 161, ஏ. வி. றோட் இல்லத்தில் நடைபெறும்.

(சி/10783)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா - குணசேகரம் (குணம்)

(முன்னாள் அ. தெ. ப. பெ. உ. வி. கூ. சங்கத்தலைவர்)

நாவலடி அரியாலையைச் சேர்ந்த கந்தையா குணசேகரம் (குணம்) அவர்கள் 24-01-2000 திங்கள் அன்று அகால மரணமடைந்து விட்டார்.

இவர் கந்தையா - பரமேஸ்வரியின் அன்பு மகனும் பூமணியின் அன்புக்கணவரும், வசந்தி (கோப்பாய் உ. அ. பிரிவு) பாஸ்கரன், லக்ஸ்மாலா (ஜேர்மன்), லஸ்மிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், வரலட்சுமி, ஜெயலட்சுமி, மகேந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சி. ஜெயக்குமார், ராஜரட்ணம் (ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், கிருசாந்துயனின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10-30 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி லேன், அரியாலையிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கு. பூமணி (மனைவி)
கு. பாஸ்கரன் (மகன்)

செம்மணி லேன்,
அரியாலை.

(73052)

### சண்முகம் கனகசிந்தாமணி

(இளைப்பாறிய ஆசிரியர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் கனகசிந்தாமணி அவர்கள் நேற்று 24-01-2000 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி தியாகராஜா ஆகியோரின் சகோதரனும் கணேஷராஜ் (லண்டன்), இராயினி (லண்டன்), உமாயினி (லண்டன்) ஆகியோரின் பெரியதந்தையும் கமலா (ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் இராஜலட்சுமி, வினாசித்தம்பி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26-1-2000) புதன்கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
வி. கமலா (ஆசிரியர்)
(மருமகள்)

G.P.S. வீதி,
கல்வியங்காடு.

(73053)

## இளைஞர் கைது

வரணிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாவளை இயற்றாலை, வரணியைச் சேர்ந்த பெரியதம்பி குகானந்தன் (வயது 23) என்ற இளைஞரே இரவு 11-30 மணிக்கு விட்டிற் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## கலந்துரையாடல்

உணவு மற்றும் சுகாதாரம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி. மேற்கு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் உணவு,மருந்துப்.பரிசோதகர் ரி.மகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது என்றும்-

இப்பகுதி தேநீர்க் கடைகள், உணவகங்கள் மற்றும் பேக்கறிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இதில் கலந்து கொள்ளுமாறும் வலிமேற்கு பிரதேச சபையின் தலைவர் கேட்டுள்ளார். (இ-10)

## பருவகாலச்சீட்டு விநியோகம்

மாணவருக்கான பருவகால சீட்டு விநியோகம் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் அறிவித்துள்ளார்.

அடுத்த மாதம் முதல் அமுலுக்கு வரவுள்ள புதிய சலுகைக் கட்டண விவரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். அவை பின்னர் உதயனில் வெளியாகும். (ஐ)

## இலங்கை அணி வென்றது

கொழும்பு, ஜன. 25

நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 11 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.1 ஓவர்களில் 220 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் ஆட்டம் இழந்தது. (ஐ-8)

## ஆசிரியரைக் காணவில்லை

கைதடிப் பகுதியைச் சேர்ந்த தனியார் கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் ஒருவர் கடந்த 21 ஆம் திகதியிலிருந்து காணாமற்போயுள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைதடி கிழக்கைச் சேர்ந்த "பொன்னம்பலம் சிவகரன் (வயது 25) என்பவரே 20-ஆம் திகதி இராணுவத்திடம் கொடுத்த தனது அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காகச் சென்றபொழுது காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பொதுப்பணிச்சேவையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்து 24-01-2000 அன்று பரு. மாவட்ட நீதிமன்றில்

சமாதான நீதிவானாக
சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட
கொற்றாவத்தை மலையந் தோட்டத்தைச் சேர்ந்த

### திருமிகு சி. மகாலிங்கம்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாசிலா அச்சகம்
நெல்லியடி.

மாசிலா தொலைத்தொடர்பு நிலையம்.
பொலிகண்டி, சமரபாகு.

(73047)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்

### பு. திருஞானசம்பந்தன்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபை,
பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
யாழ். பட்டணக் கிளை.

(சி/10784)

உங்கள் அச்சகத் தேவைகளுக்கு

- கொம்பியூட்டர் எழுத்தமைப்பு
- ஓ (f) வ்செற் அச்சமைப்பு
- FIVE STAR ஸ்கிறீன் அச்சமைப்பு

ஆகியவற்றுக்கு நாடவேண்டிய இடம்:

பிள்ளையார் அச்சகம்
PILLAIYAR Offset Printers

676, பருத்தித்துறைவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

முத்துவிநாயகர் கோயிலடி,
கரணவாய்.
கரவெட்டி.

(73042)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ மங்களகரமான பிரமாதி வருடம் தை மாதம் 13 ஆம் நாள் (27-01-2000) வியாழக்கிழமை சித்திரை நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய முற்பகல் 9.54 மணி முதல் 11.06 மணி வரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
வசந்தகுமார்
அவர்களுக்கும்



எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
கீதா
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு நல்லூர் சட்டநாதர் வீதி இளம் கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திருமதி த. தம்பிராசா
''வசந்த இல்லம்''
பெரிய தோட்டம்,
வதிரி, கரவெட்டி.

திரு. திருமதி அப்புலிங்கம்
(லிங்கம் கூல் பார்)
75/17, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(73050)

(இரு வீட்டார் அழைப்பு)

## ஆசிரியைக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.25

வீட்டு வேலைக்காரச் சிறுமியை அடித்துத் துன்புறுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் ஆசிரியை ஒருவரை ஐயாயிரம் ரூபா காசுப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் செல்ல யாழ். நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா அனுமதித்தார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவருக்கே இந்தப் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

இவரது வீட்டு வேலைக்காரியான மீசாலையைச் சேர்ந்த ஆறுமுகம் புஸ்பராணி (வயது 14) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-5-9)

## பிரிட்டிஷ் டாக்டர்கள் இங்கு வருவர்

கொழும்பு,ஜன.25

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணிபுரிய பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் இலங்கை வரவுள்ளதாக இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டாகேட் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனாவை நேற்றுமுன்தினம் சந்தித்த பிரிட்டிஷ் தூதுவர் இந்தத் தகவலை அவரிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிலுள்ள மருத்துவ மனைகளில் டாக்டர்களுக்குப் பற்றாக்குறை நிலவிவருவது தெரிந்ததே.

( ஐ-7-க)

## விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜன.25

களுத்துறைச் சிறைச்சாலையில் அண்மையில் தமிழ்க்கைதிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த குழு நேற்று தனது இடைக்கால அறிக்கையை நீதியமைச்சிடம் ஒப்படைத்தது.

இச்சம்பவம் தொடர்பாக நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் தன்னால் விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக அந்தக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஐ-7-150)

## குற்றம் சுமத்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலையுடன் சம்பந்தப்பட்டார்கள் என்பதற்குச் சரியான ஆதாரங்கள் கிடைக்காமல் அவர்களை எப்படிக் கைதுசெய்ய முடியும்?

செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைகளில் என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பப்படுகின்றது. இந்த விவகாரம் தொடர்பாக 336 பேரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளோம். இது தொடர்பாக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தொடர்ந்தும் விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கின்றோம் - இப்படி அவர் மேலும் கூறினார். (உ-3-5-7)

# செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னையையும் கூட அவர் நேற்று நீதிமன்றில் வெளியிட்டார்.

செம்மணிப் புதைகுழி அகழ்வின் போது மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு உரியவர்களைக் கண்டுபிடிப்பதற்காக காணாமற்போனோரின் உறவினர்களின் பார்வைக்கு அந்த எலும்புக்கூடுகளையும் அவற்றோடு மீட்கப்பட்ட தடயப்பொருள்களையும் நேற்று முதல் ஒருவார காலத்துக்கு வைத்திருக்க யாழ்.நீதிமன்றம் கடந்த அமர்வின் போது உத்தரவிட்டிருந்தது.

ஆனால் நேற்றுக் காலை நீதிமன்றம் கூடியபோது அரச தரப்பு அதற்குத் தயாராகவரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் தற்சமயம் மாறியுள்ள பாதுகாப்பு நிலைவரம் காரணமாக, இதுவரை இவ்விடயத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட நிபுணர்கள் இங்கு வர மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் -

சம்பவம் இடம்பெற்ற செம்மணி அரியாலை பிரதேச மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாலும் -

விசாரணைக்கு உதவி வந்த இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் தற்போதுள்ள சூழ்நிலையில் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டியிருப்பதால், இந்த விசாரணைகளுக்கு உதவ முடியாதிருப்பதாகத் தெரிவித்திருப்பதாலும்-

செம்மணி விவகாரத்தை மேலும் ஆறு வாரங்களுக்கு ஒத்திப்போடுமாறும் ; அரச சட்டத்தரணி கோத்தாகொட நேற்றுக் காலை நீதிமன்றத்தில் கூறினார். இதுவே விசேட நீதிவானை சீற்றமுற வைத்தது.

"தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் தடயப் பொருள்களை மக்கள் பார்வைக்கு வைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இடம் யாழ். பொலீஸ் நிலையம். அது அதி உச்சப்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளது. அத்தோடு குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை இடம்பெயர்வு என்பது அவர்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தது. இந்த இடம்பெயர்வு மட்டுமல்ல; இன்னும் பல இடம்பெயர்வுகள் வரலாம். இடம்பெயர்ந்து எங்கிருந்தாலும் இந்த விசாரணைக்காக அவர்கள் நிச்சயம் சமுகம் தருவார்கள்.

"இந்த விவகாரத்தை ஒத்தி வைத்துக் கொண்டே போனால் விசாரணைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. இப்படியே இந்த விடயத்தை இழுபடவிட்டால் நீதியின்பால் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை கேள்விக்குறியாகிவிடும். எனவே மேலும் நீடிக்க நீதிமன்றம் அனுமதிக்கமாட்டாது.

"செம்மணி விவகாரம் விசேடமாக இந்த விசாரணை நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.இந்த விசாரணையை மேற்கொள்ள இரு நீதிவான்கள் முன்னர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் பின்னடித்ததை அடுத்து என்னை இதற்கு நியமித்தனர். கடந்த ஒன்றரை வருடமாகியும் விசாரணை முடிவதாகத் தெரியவில்லை.

"பாடசாலை மாணவி கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கின் குற்றவாளிகள் ஐவரும் செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பாக பல தகவல்களை வெளியிட்டுள்ளனர். இக்கொலைகள் தொடர்பாக அவர்கள் இராணுவம் மற்றும் பொலீஸைச் சேர்ந்த பதினான்கு பேரின் பெயர்களைப் பிரஸ்தாபித்துள்ளார்கள். அவர்களில் ஒருவரையாவது இதுவரை கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தினீர்களா? அல்லது நீதிமன்றத்துக்கு இந்த விசாரணைகள் குறித்து தகவல் ஏதேனுமாவது கொடுத்தீர்களா?" - என்று நீதிவான் அரச சட்டத்தரணியிடம் கேள்வி எழுப்பினார்.

"இன்னும் இந்த விசாரணையை நீடித்துக் கொண்டுபோக நீதிமன்றம் விரும்பவில்லை. விரைவாக இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவரவே நீதிமன்றம் விரும்புகின்றது. அப்படி விசாரணையை முடிக்க முடியாது விட்டால், அந்த நிலையில் விசாரணைகளை நானே முடித்து வைப்பேன். விசாரணையை முடித்தமைக்கான காரணங்களையும் நான் பகிரங்கப்படுத்துவேன். அதனால் யாருக்கும் ஏற்படப்போகும் பாதிப்புக் குறித்து நான் பொருட்படுத்தப்போவதில்லை." -

இப்படி நீதிவான் மேலும் தெரிவித்தார். (உ-3-5-9)

## மக்கள்இடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டிருந்தன.

அப்பகுதியைச் சேர்ந்த பலர் நேற்றுமுன்தினம் இரவே அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.


எமது இன்றைய புதிய வெளியீடு

ராம்கி, பூஜா, சரத்பாபு நடிக்கும்

காதல் ரோஜாவே

(ஐங்கரன் ஒரிஜினல்)

வீடியோ விமல்,
யாழ்ப்பாணம்.

(C/10790)



A/L 99 DAY

கணக்கீடு

Mr. முகுந்தன்

ஆரம்பம்:
26 - 01 - 2000
புதன் 10.00 மணி

றோயல் அக்கடமி

சாவகச்சேரி.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 1916 - 05 - 04



ஆண்டவன் அடியில் 1999 - 12 - 26

அமரர்

### தாமோதரம்பிள்ளை பெரியதம்பி

வலம்புரியின் முத்தெனவே உதித்து
வாழ்மனைக்கோர் ஒளிவிளக்காய் விளங்கி
கண்ணின் மணிபோல் காதலுடன் அரவணைத்து
வண்ண மடிமேல் வளர்த்த சுகம் நாமறிந்து
அன்பை நினைந்துருகி ஐயா நாம் கலங்குகின்றோம்
பாரினில் இத்துயர் போகுமோ ஐயாவே?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாம் துயருற்றிருந்த வேளையில் சகல வழிகளிலும் உதவிபுரிந்து அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

*நெய்யம்புலம்,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.*

(72993)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவசம்பு

காரைநகர் - தங்கோடையைப் பிறப்பிடமாகவும், கைலாசபிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசம்பு நேற்று இரவு (24-01-2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், கெங்காதேவி (கொழும்பு), திருஞானசம்பந்தர் (சவூதி), வைகுந்தவாசன் (வே.கந்தையாபிள்ளை அன்சன்ஸ் - மருந்துக்கடை உரிமையாளர், யாழ்ப்பாணம்), ஞானதேவி, இராசகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம் (கிராண்ட்பாஸ்), நல்லம்மா, தவமணி, சபாநாயகம் (உரிமையாளர், செல்லமுத்து புடைவை மாளிகை, சங்கானை), சோதிநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2000) பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் கைலாசபிள்ளையார் மேற்கு வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.வைகுந்தவாசன்**
(மகன்)

இல. 09, கைலாசபிள்ளையார் மேற்கு வீதி,
நல்லூர்.

(C/10792)

## மனுவல் மிக்கேல்பிள்ளை (ஆசாரியார்)

மனுவல் மிக்கேல்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற மரியப்பிள்ளை (மரியாச்சி) அவர்களின் அன்புக் கணவரும், மனுவல் - லூசியா தம்பதிகளின் அருமை மகனும், மேரிப்பிள்ளை (முத்துக்குட்டியர்) அவர்களின் அருமைச் சகோதரனும், ஜெராட் (டென்மார்க்), அன்ரனி கிறிஸ்ரி (ஓவியர், யாழ்.மாநகரசபை), கிளறன்ஸ் சந்திரா (முகாமையாளர், யாழ். ப.நோ.கூ.சங்கம்), திருமதி ரூபசிங்கம் (மாவட்ட விளையாட்டு அதிகாரி, கச்சேரி, யாழ்ப்பாணம்), கலிஸ்ராஸ் (ஹொலண்ட்), லெனாட் (பிரான்ஸ்), பேனாட்பபி (ஹொலண்ட்), சகாயதேவி (ஆசிரியை, புனித் சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லலிதா (டென்மார்க்), அன்ரனீற்றா, லில்லி, அஜந்தா (ஹொலண்ட்), கலா (பிரான்ஸ்), செல்வி (கொழும்பு), குலேந்திரன் ஆகியோரின் அருமை மாமனாரும் ஜெரி, டிலோசனா (ஆசிரியை யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), டிலோஜன், ஜொவ்றின், யோசப், பெபியன், மரீன் சங்கா, சரோன் பிரியங்கா, டிலான், டிருசன், டிலக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் மார்க்கஸ் கிறண்டினின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.01.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**எம். ஏ. கிறிஸ்ரி(மகன்)**
**(ஓவியர், யாழ்.மாநகரசபை)**

*32, சென்.பற்றிக்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*


# STP COMPUTER WORLD

54A, Palaly Road, Kantharmadam, Jaffna. TP:2674 E-Mail: stpcom@sltnet.lk

**SPECIAL SCHOLARSHIP SCHEME - 2000**

Separate Qualifying Examinations for 10 - 16 age group and over 16 age group.

**Closing Date For Applications 30-01-2000**

Examination on 04-02-2000 - Friday
Subjects: *Aptitude and General Knowledge*

Admission cards will be sent by post. Those who do not receive by 02-02-2000, please contact the office with the MO/Cash payment receipt.

Courses start on February 2000 for the first batch and on August 2000 for the second batch.

**Director.**

(C/10787)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-01-2000 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.